# சிலாங்கூர்

இன்று இலவசம்

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

திருவள்ளுவர் ஆண்டு 2053 / பிலவ வருடம் சித்திரை மாதம் / ஏப்ரல் 4 / 2022 April 4/2022


## ரூமா இடாமான் திட்டத்தின் கீழ் 78,182 வீடுகள் நிர்மாணிக்கப்படும்

ஷா ஆலம்:–

மாநில மக்களுக்காக அடுத்த சில ஆண்டுகளில் மந்திரி புசார் கழக கழக (எம்.பி.ஐ.) ரூமா இடாமான் திட்டத்தின் கீழ் 78,182 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்று வீடமைப்பு நகர்ப்புற நல்வாழ்வுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

கடந்த 2020 மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் வாயிலாக மூன்று மாவட்டங்களில் 4,819 வீடுகள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதாக அவர் சொன்னார். கட்டுப்படி விலை வீட்டு நிர்மாணிப்பு ஊக்குவிப்புத் திட்ட முன்னெடுப்பின் வாயிலாக கட்டுமானத் துறையில் கோவிட்–19 பொருந்தொற்றுக்கு பிந்தைய பொருளாதார மீட்சியை உறுதி செய்ய இயலும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 2020 மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால் பல திட்டங்கள் இன்னும் முழுமை பெறாமலிருக்கின்றன. இத்திட்டங்கள் இவ்வாண்டிலும் தொடரும் என்பதோடு அடுத்த சில ஆண்டுகளில் 44,304 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்றார் அவர். சிலாங்கூர் மாநில வீடமைப்பு சொத்துடைமை கழகத்திடமிருந்து தாங்கள் 5,298 விண்ணப்பங் களைப் பெற்றுள்ளதாக கூறிய அவர், தற்போது 4,819 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வரும் வேளையில் எஞ்சியவை தனியார் துறையினரால் மேற்கொள்ளப் படும் ரூமா ஹராப்பான் திட்ட வீடுகளைக் கொண்டு ஈடு செய்யப்படும் என்றார். மாநில சட்டமன்றத்தில் நேற்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷாவின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.



## வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கு சிலாங்கூர் அரசு 770 கோடி வெள்ளி ஒதுக்கீடு

டாமன்சாரா :–

சிலாங்கூரில் வெள்ளத் தடுப்புத் திட்டங்களை மேற்கொள்ள மாநில அரசு 770 கோடி வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

கிள்ளான் ஆற்றை ஆழப்படுத்தும் பணியை உள்ளடக்கிய இத்திட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கிள்ளான் ஆற்றை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த பணி அமைந்துள்ளது.

இந்த பணிக்கு உண்டாகும் செலவில் ஒரு பகுதியை சிலாங்கூர் மந்திரி புசார் கழகம் (எம்.பி.ஐ.) ஏற்றுக் கொள்ளும் என்று அவர் சொன்னார். இன்று இங்கு பிகே கித்தா ஸ்ரீ டாமன்சாரா மார்க்கெட்டை திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாநிலத்தில் வெள்ளப் பிரச்னை க்கு நீண்ட கால அடிப் படையில் தீர்வு காணும் வகையில் வெள்ளத் தடுப்பு பணிகளை மேற்கொள்ள இவ்வாண்டில் 6 கோடி வெள்ளி ஒதுக்கப்படும் என்று மந்திரி புசார் கடந்தாண்டு டிசம்பர் மாதம் கூறியிருந்தார்.

இந்நோக்கத்திற்காக கடந்த 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட அதே மதிப்பிலானத் தொகை இவ்வாண்டும் ஒதுக்கப்படுவதாக கூறிய அவர், எனினும் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக கடந்தாண்டு ஒதுக்கப்பட்ட தொகையில் 4 கோடி முதல் 4.5 கோடி வெள்ளி வரை மட்டுமே செலவிடப்பட்டது என்றார்.


பக்கம் 10 — 2025ல் வறட்சி ஏற்படும் எனக் கணிக்கப்பட்டுள்ளது, சிலாங்கூர் நீர் ஆதாரங்களை முன்கூட்டியே தயார்படுத்த திட்டமிட்டுள்ளது

பக்கம் 11 — தாமான் செந்தோசா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயம் ஈகையின் உருவாய் இறைவனின் திருத்தலம்

பக்கம் 13 — சிலாங்கூர் அரசின் உதவியால் பயன் பெறும் புக்கிட் ரோத்தான் பாரு தமிழ்ப்பள்ளி

# தடுப்பூசி முயற்சியை சுல்தான் பாராட்டினார்



ஷா ஆலம் :–

மாட்சிமை தங்கிய (DYMM) சிலாங்கூர் சுல்தான் இரண்டு டோஸ் தடுப்பூசியை எடுத்துக்கொண்டு 90 விழுக்காட்டை எட்டிய மாநில மக்களுக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்தை (பிக்) செயல் படுத்தியதாலும், சிலாங்கூர் தொழில்துறை தடுப்பூசி (செல்வேக்ஸ்) திட்டம், செல்வேக்ஸ் சமூகம், செல்வேக்ஸ் மொபைல், செல்வாக்ஸ் யூத் மற்றும் செல்வாக்ஸ் பூஸ்டர் மூலம் மாநில அரசின் முயற்சிகளாலும் இந்த சாதனை உந்தப்பட்டதாக சுல்தான் ஷராபுதீன் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கூறினார்.

“நாடு தற்போது எண்டமிக் நிலைக்குச் செல்லத் தயாராகிவிட்டாலும், நிலையான இயக்க நடைமுறைகளை (SOP) தொடர்ந்து கடை பிடிக்குமாறு எனது மக்களுக்கு நான் அறிவுறுத்த விரும்புகிறேன். “மற்ற தொற்று அல்லாத நோய்களைத் தடுக்கும் முயற்சியாக ஆரோக்கியமான வாழ்க்கை முறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடை பிடிக்குமாறு அனைத்து மக்களுக்கும் நினைவூட்ட விரும்புகிறேன்’’ என்று மார்ச் 14 அன்று கூறினார்.

சிலாங்கூர் மாநில சட்டசபையின் தொடக்க விழாவில் பேசிய சுல்தான் ஷராபுதீன், மாநில அரசு செயல் படுத்தும் சுகாதார பரிசோதனைத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

“ஆபத்தான நோய்களை முன்கூட்டியே கண்டறிவதில் இந்த திட்டம் முக்கியமானது. விரைவான சிகிச்சை மற்றும் குணப்படுத்தும் முயற்சிகளை உறுதிப்படுத்துகிறது,’’ என்று கூறினார். இலவச சுகாதார பரிசோதனை திட்டம் இந்த மாதம் தொடங்கி 56 மாநில சட்டமன்றங்களிலும் செயல்படுத்தப் படும் என்று பொது சுகாதார ஆட்சிக்குழு டாக்டர் சித்தி மரியா மாமூட் தெரிவித்தார். இலவசத் திட்டமானது முன்கூட்டியே மக்களிடையே நோய் தொற்றை கண்டறிய உதவுகிறது.

## பல்கலைக்கழகத்துடனான நல்லுறவைக் கட்டிக்காப்பீர்

# யு.பி.எம். மாணவர்களுக்கு சுல்தான் அறிவுறுத்து

ஷா ஆலம்:–

மலேசிய புத்ரா பல்கலைக்கழக (யு.பி.எம்.) மாணவர்கள் பல்கலைக்கழகத்துடனான நல்லுறவை தொடர்ந்து கட்டிக் காத்து வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளனர். அந்த உயர்கல்விக் கூடம் தொடர்ந்து சரியான தடத்தில் பயணிப்பதற்கும் அறிவாற்றலும் தொலைநோக்கும் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதற்கும் இந்த நல்லுறவு அவசியமாவதாக மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கூறினார்.

இத்தகைய நல்லுறவின் வாயிலாக பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்கு மாணவர்கள் தங்களின் பங்களிப்பை வழங்கும் அதேவேளையில் தங்களை பட்டதாரிகளாக உருவாக்கிய கல்வியாளர்களுக்கு நன்றிக் கடனைத் செலுத்துவதற்குரிய வாய்ப்பினையும் பெற இயலும் என்று அந்த உயர்கல்விக் கூடத்தின் வேந்தருமான அவர் தெரிவித்தார்.



இன்று நடைபெற்ற மலேசிய புத்ரா பல்கலைக்கழகத்தின் 45 வது பட்டமளிப்பு நிகழ்வில் உரையாற்றிய போது சுல்தான் இவ்வாறு கூறினார்.

இன்று தொடங்கி இம்மாதம் 24 ஆம் தேதி வரை நடைபெறும் இந்த பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 6,142 மாணவர்கள் பல்வேறு துறைகளில் பட்டம் பெறுகின்றனர்.

அவர்களில் 484 பேர் பி.எச்.டி. முனைவர் பட்டத்தையும் 1,611 பேர் முதுகலைப் பட்டத்தையும் 3,564 பேர் இளங்கலை பட்டத்தையும் 483 பேர் டிப்ளோமாவையும் பெறுகின்றனர்.

## அரசாங்க நிலங்களில் குடியிருப்போருக்கு நில உரிமை

# பணிகளை விரைவுபடுத்த மந்திரி புசார் உத்தரவு



ஷா ஆலம்:–

நில உரிமை வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அரசாங்க நிலங்களில் குடியிருப்போரை அடையாளம் காணும்படி நில மற்றும் கனிமவளத் துறையை மாநில அரசு பணித்துள்ளது.

நில உரிமைக்கு விண்ணப்பம் செய்வதற்காக பொது மக்கள் நில அலுவலகம் வரும் வரை காத்திருப்பதைக் காட்டிலும் நில அலுவலகமே முன்வந்து அத்தகைய இடங்களை அடையாளம் காண்பது ஆக்ககரமான நடவடிக்கையாக அமையும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இத்தகைய நடவடிக்கையின் வாயிலாக மேலும் வெளிப்படையான போக்கை கடைபிடிப்பதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் நம்மைத் தேடி வரும் வரை காத்திருக்க வேண்டாம் என்று நில மற்றும் கனிவள இலாகாவை நாம் கேட்டுக் கொள்கிறோம். நாம் முன்வந்து வாய்ப்பினை வழங்க வேண்டும் அல்லது அது தொடர்பில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இதன் வழி வெளிப்படையான நிர்வாக முறையை உறுதி செய்ய இயலும் என்றார் அவர்.

மாநில சட்டமன்றத்தில் நேற்று தாமான் டெம்ப்ளர் உறுப்பினர் முகமது சானி ஹம்சான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு சொன்னார்.

இன்னும் நிலமின்றி இருக்கும் சிலாங்கூர் வாசிகளுக்கு நில உரிமை வழங்குவதற்கான சாத்தியம் குறித்து சானி ஹம்சான் கேள்வியெழுப்பியிருந்தார்.

புறம்போக்கு நிலங்கள், நகர்ப்புற குடியேற்றப் பகுதிகள் மற்றும் நில உரிமை உறுதி செய்யப்படாத இடங்களாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட கட்டுமானங்களை சட்டப்பூர்வமாக்கி நில உரிமை வழங்கும் பணியை கடந்த 2008 முதல் 2019 வரை மாநில அரசு மேற்கொண்டு வந்ததாக அமிருடின் கூறினார்.

அந்த நிலத்திற்கான பிரீமியத் தொகையாக அல்லது முன்பணமாக 1,000 வெள்ளியை நில உரிமையாளர்கள் செலுத்த வேண்டும். அந்த நிலத்தை விற்கும் போது அல்லது அடமானம் வைக்கும் போத அந்நிலத்திற்கான உண்மையான மதிப்புத் தொகையை செலுத்த வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது என்றார் அவர்.

கடந்த 2020 ஆம் ஆண்டில் அந்த நில உரிமையை மாநில அரசு நீடித்ததோடு பிரீமியத் தொகையை 1,000 வெள்ளியிலிருந்து 5,000 வெள்ளியாக உயர்த்தியது என்றும் அவர் குறிப்பிட்டார். சம்பந்தப்பட்ட நிலத்திற்கு பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் வாரிசுகளாக நியமிக்கப்பட்ட காரணத்தால் பிரீமியத் தொகை உயர்த்தப்பட்டது என அவர் தெளிவுபடுத்தினார்.




ஷா ஆலம்:–

சிலாங்கூர் மாநில அரசு, பாங்கிட் சிலாங்கூர் உதவி (BSB) நிதி RM132.628 மில்லியனை அனைத்து நிலம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு (PTD) இம்மாதம் 16 ந் தேதி வரை அனுப்பியுள்ளதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கடந்த டிசம்பரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மொத்தம் 118.250 மில்லியன் ரிங்கிட் வழங்கப்பட்டு, நில மற்றும் மாவட்ட அலுவலகங்களில் மீதமுள்ள தொகை ரிம14.378 மில்லியன் ஆகும்.

“இன்னும் 8,000 குடும்பங்களுக்குச் சுமார் 8 மில்லியன் ரிங்கிட் தேவைப் படுகிறது. கொஞ்சம் பாக்கி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம், PTDயின் பாக்கெட்டில் இன்னும் RM 14 மில்லியன் இருக்கிறது என அவர் தெரிவித்தார். “எனவே, (ஒதுக்கீடு) போதுமானது மற்றும் பெட்டாலிங், கிள்ளான், உலு லங்காட் மற்றும் கோலா லங்காட் ஆகிய இடங்களில் மாவட்ட அளவில் விநியோகிக்கப்பட்டுள்ளது,” என்று அவர் இன்று சிலாங்கூர் மாநிலச் சட்டமன்ற அமர்வில் கூறினார். பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதற்கு, மறுபரிசீலனை செயல்முறை தேவைப்படும் விண்ணப்பங்கள் மீண்டும் அனுப்பப்பட்டதைத் தவிர, சில விண்ணப்பங்கள் மேலெழுந்தவாரியாக இருப்பதாக ஒப்புக்கொண்டார்.

“இப்போது நாங்கள் அரங்குகளில் விநியோகத்தை ஏற்பாடு செய்யவில்லை, மீதி (பிஎஸ்பி) பெறுநர்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளப்படும் மற்றும் வங்கி கணக்கு வழி டெலிவரி செய்யப்படும்,” என்று அவர் கூறினார்.சிலாங்கூர் அரசாங்கம் உள்கட்டமைப்பைச் சரிசெய் வதற்கு RM 100 மில்லியன் நிதியை அறிவித்தது, அது தவிர , அதாவது பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் RM 1,000 வழங்குவதும், வெள்ளத்தால் உயிரிழந்த குடும்பங்களின் அடுத்த உறவினர்களுக்கு RM 10,000 ரொக்கமும் வழங்கப்படுகிறது.டிசம்பர் 21 அன்று அறிவிக்கப்பட்ட உதவியின் மூலம் 114,081 குடும்பத் தலைவர்கள் பயனடைந்தனர். பிப்ரவரி 28 நிலவரப்படி, கிள்ளான் அதிகபட்சமாக 60,427 குடும்பங்களும், அதைத் தொடர்ந்து பெட்டாலிங் (20,948 குடியிருப்பாளர்கள்) மற்றும் கோலா லங்காட் (10,904 பேர்) பெற்றனர். உலு லங்காட்டில் மொத்தம் 7,834 குடும்பங்கள்; 6,878 (சிப்பாங்), 5,915 (கோலா சிலாங்கூர்) மற்றும் 1,041 (கோம்பாக்) ஆகியோரும் உதவியைப் பெற்றனர்.




## வெ.16 கோடி கூடுதல் செலவை அங்கீகரித்தது சட்டமன்றம்.

ஷா ஆலம் சிலாங்கூர் மாநிலச் சட்டமன்றம் மார்ச் 18 அன்று மூன்றாவது வாசிப்புக்குப் பிறகு 2022 ம் ஆண்டுக்கான துணை பட்ஜெட்டை நிறைவேற்றியது. மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவைப் பெற்றதையடுத்து இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

குறிப்பிட்ட சில துறைகளுக்கான பற்றாக் குறையை ஈடுகட்டத் தற்போதைய நிதித் தேவைகளின் அடிப்படையில் , பற்றாக்குறையை ஈடுகட்ட முதல் கூடுதல் வழங்கல் சட்டமாக வெ.16 கோடி கூடுதல் தேவை இருக்கிறது என்றார் மந்திரி புசார் டத்தோ’ ஸ்ரீ அமிருடின் ஷாரி.

“கூடுதல் ஒதுக்கீடு பின்வருமாறு, அதாவது பந்துவான் பாங்கிட் சிலாங்கூர் (பிஎஸ்பி) வெள்ள துயர்துடைப்பு நிதி செலவுகளை ஈடுகட்ட வெ.15 கோடி தேவைப்படுகிறது மற்றும் சிலாங்கூர் மாநில வீட்டுக் கடன் நிதி உச்சவரம்பு உயர்வுக்கு வெ.1 கோடி தேவைப படுகிறது,” என்று அவர் கூறினார்.

கூடுதல் ஒதுக்கீட்டின் நோக்கம், வெ.15 கோடியில் பெரும் பகுதியை வெள்ளத்தால் பாதிக்கப்பட் டவர்களுக்கு உதவுவதும் அது தொடர்பான செலவுகளை ஈடுகட்ட தேவைப் படுகிறது என்று அவர் விளக்கினார். மேற்கண்ட ஒதுக்கீடு 118,000 குடும்பங்களின் துயர்துடைக்கப்பட உதவியுள்ளது. இருப்பினும், மேலும் 8,000 குடும்பங்கள் உதவி நாடி உள்ளன, எனவே அதிகபட்சமாக 124,000 பேர் பங்கிட் சிலாங்கூர் உதவியைப் பெறுபவர்கள்.

துயர்துடைப்பு மையங்களுக்கு வெளியில் தங்கிய மக்களுக்கும் உதவி வழங்கும் வண்ணம் அவர்களின் கோரிக்கை மனுக்களும் சரிபார்க்கப்படுகிறது. அதற்கு இன்னும் 1,50,000 வரை ஒதுக்குவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

“மார்ச் 31 க்குள், இந்த விவகாரத்துக்கு தீர்வு காணவுள்ளதாக, அவர் கூறினார். சிலாங்கூரில் உள்ள அரசு ஊழியர்கள் வீடுகளைச் சொந்தமாக்குவதற்கு மாநில வீட்டுக் கடன் நிதிக்காகக் கூடுதலாக வெ.1 கோடி உள்ளடக்கியதாக அமிருடின் கூறினார்

## கலைஞர்களின் சுமையைக் குறைக்க

# பொழுதுபோக்கு துறைக்கு வரிச்சலுகை

### மந்திரி புசார் கோடி காட்டினார்

ஷா ஆலம்:–

2022 ஆம் ஆண்டு முழுமைக்குமான பொழுதுபோக்கு வரியை முழுமையாக ரத்து செய்வது அல்லது குறைப்பது குறித்து வரும் ஏப்ரல் முதல் தேதிக்கு முன்னதாக மாநில அரசு முடிவு செய்யும்.

இவ்விவகாரம் தொடர்பில் தரவுகள் மற்றும் விபரங்களைப் பெறுவதற்கு ஏதுவாக முன்கூட்டியே மாநில ஆட்சிக்குழுவில் இது குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

நேரடி மேடை நிகழ்ச்சிகளை நடத்துவதில் உள்நாட்டு கலைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களை மாநில அரசு உணர்ந்துள்ளது. இறைவன் அருளால் அத்துறையினருக்கு நல்ல செய்தி விரைவில் கிடைக்கும் என்று அவர் சொன்னார்.

நமக்கு இரு வழிகள் உள்ளன. 2022 ஆம் ஆண்டிற்கான பொழுது போக்கு வரியை ஐந்து விழுக்காடாக குறைப்பது அல்லது முழுமையாக ரத்து செய்வது ஆகியவையே அந்த வழிகளாகும். எனினும் திரையரங்குகளில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வரி விகிதம் தொடர்ந்து அமலில் இருக்கும் என்றார் அவர்.

நாம் வசூல் செய்யும் ஒட்டு மொத்த பொழுதுபோக்கு வரியில் மேடை படைப்புகள் பெரிய அளவில் பங்களிப்பை வழங்கவில்லை என்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.



மாநில சட்டமன்றத்தில் நேற்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதனிடையே, மாநிலத்தில் பொழுதுபோக்கு வரி வசூலிப்பு முறை டிக்கெட் சார்ந்த மற்றும் டிக்கெட் அல்லாத இரு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதாக அவர் சொன்னார்.

## காகித கூப்பன்களை இனி பயன்படுத்த முடியாது

# ஏப்.1 முதல் இலக்கவியல் பார்க்கிங் முறை

# சிலாங்கூரில் அமல்

ஷா ஆலம் :–

வரும் ஏப்ரல் முதல் தேதி தொடங்கி சிலாங்கூர் முழுவதும் உள்ள ஊராட்சி மன்றங்களில் இலக்கவியல் கார் நிறுத்தக் கட்டண முறை (இ–கூப்பன்) அமல்படுத்தப்படவுள்ளது.



கார் நிறுத்தக் கட்டணங்களை எளிதாக செலுத்துவதற்கு எதுவாக எஸ்.எஸ்.பி. எனப்படும் ஸ்மார்ட் சிலாங்கூர் பார்க்கிங் செயலியை தங்கள் கைப்பேசிகளில் விரைந்து பதிவிறக்கம் செய்யும்படி மாநில மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஸ்மார்ட் சிலாங்கூர் செயலியை விரைந்து பதிவிறக்கம் செய்யுங்கள். இந்த முறை எளிதானது, விரைவானது மற்றும் பாதுகாப்பானது என்று இந்த செயலியை அறிமுகப்படுத்தியுள்ள ஸ்மார்ட் சிலாங்கூர் தனது பேஸ்புக் பக்கத்தில் கூறியது. இந்த எஸ்.எஸ்.பி. செயலியை கூகுள் பிளேஸ்டோர், ஏப்ஸ்டோர் மற்றும் ஹூவாய் ஸ்டோர் தளங்கள் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

காகித வடிவிலான கார் நிறுத்துமிடக் கூப்பன்களின் பயன்பாடு வரும் ஏப்ரல் முதல் தேதியுடன் முடிவுக்கு வருவதாக மாநில அரசு முன்னதாக கூறியிருந்தது.

பொதுமக்கள் தங்கள் வசமுள்ள இன்னும் பயன்படுத்தாத காகித கூப்பன்களை கொடுத்து ரொக்கத் தொகையை இம்மாதம் 23 ஆம் தேதிக்கு பிறகு மாற்றக் கொள்ளலாம் என்று ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

எனினும், அதற்கு முன்னதாக அவர்கள் எஸ்.எஸ்.பி. செயலியை பதிவிறக்கம் செய்வது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

## நவீன முறையில் ரூமா சிலாங்கூர்

# 1,000 யூனிட்களை உருவாக்க

# பிகேஎன்எஸ் இலக்கு



ஷா ஆலம்:–

சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகம் (பிகேஎன்எஸ்) ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்தில் ரூமா சிலாங்கூர்கூ (ஆர்எஸ்கேயு) 1,000 யூனிட்களைக் கட்ட இலக்கு வைத்துள்ளது.

தொழில்துறை கட்டிட அமைப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் மேம்பாட்டாளர்கள் உடனான ஒத்துழைப்பு மூலம் அதன் இலக்கை அடையவுள்ளதாக அதன் தலைமை நிர்வாக அதிகாரி சினார் ஹரியானிடம் அறிவித்தார். டத்தோ மாமூட் அப்பாஸின் கூற்றுப்படி, கட்டுமானத் தளங்கள் நிறுவப்படுவதற்கு முன்பு தொழிற்சாலைகளில் கட்டப்பட்ட வீட்டுக் கூறுகளைக் கொண்ட முறையைப் பயன்படுத்தும் திட்டங்களில் சைபர் ஜெயாவில் உள்ள 882 ஆர்எஸ்கேயுவில் அடங்கும்.

அவை தொழிற்சாலையில் தயாரிப்பிற்கு பின், கட்டுமான தளத்திற்கு அனுப்பப் படும், முன்பே தயார் நிலையில் இருக்கும் இடத்தில் நிறுவப்படுகிறது," என்று நேற்று பத்து மலையில் பாயு அடுக்குமாடி குடியிருப்பாளர் இல்லங்கள் திறப்பு விழாவின் போது அவர் கூறினார்.

பத்து மலைகளில் கான்கிரீட் மோல்ட் அமைப்பின் கலவையுடன் முடிக்க அதே தொழில்நுட்பம் ஸ்ரீ தெமெங்குங்கில் உள்ள 420 ஆர்எஸ்கேயு யூனிட்களில் பயன்படுத்தப்பட்டது என்று மாமூட் மேலும் கூறினார்.

## அம்பாங் ஜெயா வட்டாரத்தில்

# ஆபத்தான நிலையில் 48 மலைச் சரிவுகள்

## – சட்டமன்றத்தில் தகவல்



ஷா ஆலம்:–

அம்பாங் ஜெயா நகராண்மை கழகப் பகுதியில் உள்ள 118 மலைச் சரிவுகளில் நாற்பத்தெட்டு சரிவுகள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் அவற்றைச் சீரமைப்பதற்கு சுமார் 10 கோடி வெள்ளி தேவைப்படுவதாகவும் சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இக்ராம் எனப்படும் மலேசிய பொதுப்பணிக் கழகம் போன்ற அமைப்புகளின் நிபுணர்களின் ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் இதற்கான இறுதிச் செலவு அமையும் என்று ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார். ஊராட்சி மன்றமும் தங்கள் பகுதியில் உள்ள மலைச் சரிவுகளை ஆய்வு செய்து மேலும் சரிசெய்வதற்கு இக்ராமின் ஒத்துழைப்பை நாடியுள்ளது என்று அவர் நேற்று மாநில சட்டமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

பழுதுபார்ப்பு பணிகளை முன்கூட்டியே மேற்கொள்வதற்காக அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகம் குத்தகையாளர்களை நியமித்துள்ளது. இதன் மூலம் பாதிப்புகளை விரைந்து தடுத்து விடலாம் என அவர் சொன்னார். ஊராட்சி மன்ற நிலையில் மேற்கொள்ளப்படும் குறுகிய காலத் திட்டங்கள் குறித்து கருத்துரைத்த அவர், அதன் ஆக்கத் தன்மையை உறுதி செய்வதற்கான திட்டங்கள் வரையப்பட்டு வருகின்றன என்றார். எடுத்துக்காட்டாக, ஷா ஆலம் மாநகர் மன்றம் ஷா ஆலம் பகுதியில் நகர்ப்புற வடிகால் பெருந்திட்டத்தை செயல்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இது பருவநிலை மாற்ற நடவடிக்கைத் திட்டத்திற்கு ஏற்ப உள்ளது என்று அவர் கூறினார்.

சுபாங் ஜெயா மாநகர் மன்றமும் தனது பங்கிற்கு 330,000 வெள்ளி மதிப்பீட்டில் 11 பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை அமைப்பை நிறுவி, வெள்ளத் தொடர்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

எனவே, உள்ளூர் அதிகாரிகள் எதிர்காலத்தில் வெள்ளத்தைத் தணிக்க பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

## நிலச்சரிவில் இறந்தவர்கள் குடும்பத்திற்குத்

# தலா 10,000 வெள்ளி உடனடி உதவி

## – மந்திரி புசார் அறிவிப்பு

அம்பாங் ஜெயா:–

இங்குள்ள தாமான் புக்கிட் பெர்மாய் 2 பகுதியில் நேற்று ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உடனடி நிவாரண உதவியாகத் தலா 10,000 வெள்ளியை மாநில அரசு வழங்கும்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுகளுக்கு உதவி நிதி முன்னதாக ஒப்படைக்கப்படும் வேளையில் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்குப் பின்னர் உதவிகள் வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இந்த மண்சரிவு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா 10,000 வெள்ளி நிவாரணத் தொகையை வழங்குவதில் தற்போது முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று அவர் சொன்னார். இந்த இயற்கைப் பேரிடரில் பாதிப்புக்குள்ளான மற்ற குடியிருப்பாளர்களுக்கு எத்தகைய உதவிகளை வழங்குவது என்பது குறித்து ஆராயவுள்ளோம். மக்கள் குடியிருப்பதற்கு இப்பகுதி பாதுகாப்பானதா என்பதை உறுதி செய்வதுதான் தற்போதைய தலையாய பணியாகும் என்று தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிக்கு வருகை மேற்கொண்ட பின்னர்ச் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார். முன்னதாக அவர், இச்சம்பவம் தொடர்பில் அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகம் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையினர் வழங்கிய விளக்கமளிப்பைக் கேட்டறிந்தார்.

அம்பாங், தாமான் புக்கிட் பெர்மாய் 2 குடியிருப்பு பகுதியில் நேற்று மாலை ஏற்பட்ட நிலச்சரிவில் நால்வர் உயிரிழந்ததோடு 15 வீடுகளும் 10 கார்களும் சேதமுற்றன.

# துபாய் கண்காட்சியில் வெ.96 கோடி வெள்ளி முதலீடு பதிவு

## – டத்தோ தெங் தகவல்




ஷா ஆலம்:–

இம்மாதம் 6 முதல் 12 ஆம் தேதி வரை நடைபெற்ற “மிங்கு சிலாங்கூர்@துபாய் எக்ஸ்போ 2020“ நிகழ்வின் வழி 96 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீட்டு வாய்ப்புகள் பதிவு செய்யப்பட்டன.

மத்திய அரசு நிர்ணயித்த 50 கோடி வெள்ளி இலக்கைக் காட்டிலும் இது அதிகமாகும் என்று முதலீடு, வாணிகம் மற்றும் தொழில்துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாம் கிம் கூறினார்.

“மிங்கு சிலாங்கூர்@துபாய் எக்ஸ்போ 2020“ கண்காட்சியின் வாயிலாக அனைத்துலக முதலீட்டாளர்கள் மற்றும் வணிகர்களின் கவனத்தை ஈர்க்க முடிந்ததோடு அக்கண்காட்சியில் கலந்து கொண்ட வர்த்தகப் பேராளர்கள் சிலாங்கூர் மாநிலத்தில் முதலீடு செய்வதில் தங்களுக்கு உள்ள ஆர்வத்தையும் வெளிப்படுத்தினர் என்று அவர் சொன்னார்.

அந்தச் சிலாங்கூர் வார நிகழ்வில் 158 இணை வாணிகங்கள், 92 வாணிக ஒத்துழைப்பு வாய்ப்புகள் கண்டறியப்பட்டன. இந்த முதலீட்டு வாய்ப்புகளின் மொத்த மதிப்பு 96 கோடி வெள்ளியாகும் என்றார் அவர்.

இந்த நிகழ்வின் போது நோர்த்போர்ட் (மலேசியா)பெர்ஹாட் நிறுவனத்திற்கும் சீஹாக் லைன்ஸ் ஷிப்பி எல்.எல்.சி. நிறுவனத்திற்கும் இடையே 4.5 கோடி வெள்ளி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலச் சட்டமன்றத்தில் இன்று புக்கிட் லஞ்சான் உறுப்பினர் எலிசெபத் வோங் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“மிங்கு சிலாங்கூர்@டுபாய் எக்ஸ்போ 2020“ கண்காட்சியின் வழி மாநிலம் பெற்ற முதலீட்டின் மதிப்பு குறித்து எலிசெபத் கேள்வியெழுப்பியிருந்தார்.

# இலவச இணைய தரவு சேவை வழங்கும் ஒரே மாநிலம் சிலாங்கூர்

ஷா ஆலம்:–

இவ்வாண்டு பிப்ரவரி 28 ஆம் தேதி வரை 32,214 பேர் சிலாங்கூர் அரசின் இலவச இணையத் தரவு சேவையின் வழி பயன்பெற்றுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.




## 32,000 பேர் பயன் பெற்றனர்

ஓராண்டு காலத்திற்கு இலவசமாக இணையச் சேவையை வழங்கும் இத்திட்டத்தின் வழி பிளாட்ஸ் எனப்படும் பிளாட்ஃபார்ம் சிலாங்கூர் இணைய வணிகர்கள், யுனிசெல் மற்றும் சிலாங்கூர் அனைத்துலக இஸ்லாமிய பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட தரப்பினர் பயன்பெறத் தகுதி பெற்றுள்ளதாக அவர் சொன்னார்.

இது தவிர, பள்ளிக்குச் செல்ல முடியாத நிலையில் வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாணவர்கள் மற்றும் சிலாங்கூர் அரசின் டியூஷன் ராக்யாட் திட்டத்தில் பங்கேற்றுள்ள மாணவர்கள் உள்பட 10,000 பேருக்கு இலவச இணைய சேவைக்கான சிம் கார்டுகள் வழங்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த இலவச இணைய தரவு சேவைத் திட்டம் சிலாங்கூரில் மட்டும் அமல்படுத்தப்பட்டுள்ளது என்று மாநில சட்டமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

சிலாங்கூரில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தரப்பினருக்கு 70,000 இலவச இணைய தரவு சேவைக்கான சிம் கார்டுகள் வழங்கப்படும் என்று மந்திரி பெசார் கடந்தாண்டு ஆகஸ்டு மாதம் 4 ஆம் தேதி கூறியிருந்தார்.

இந்த திட்டத்தில் யாயாசான் சிலாங்கூர் அறவாரியத்தில் கடனுதவி பெற்ற மாணவர்கள், சிலாங்கூர் தொழில் திறன் மேம்பாட்டு மையத்தில் பயில்வோர், வணிகர்கள், விவசாயிகள் மற்றும் தனித்து வாழும் தாய்மார்களும் பங்கு பெற்றுள்ளனர்.

### 44 உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டதால்,

# மாநிலப் பொருளாதாரம் பாதிக்கவில்லை

ஷா ஆலம்:–

கோவிட்–19 காரணமாக மாநிலத்தில் 44 உற்பத்தி நிறுவனங்களின் செயல்பாடுகள் இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டது சிலாங்கூரின் நிதி அல்லது பொருளாதாரத்தைப் பாதிக்கவில்லை.

ஏனென்றால், அந் நிறுவனங்கள் வழி பெற்ற நில மற்றும் மதிப்பீட்டு வரி என்பது சொற்பமே. என்று தொழில்துறை ஆட்சிக்குழு டத்தோ ‘தெங் சாங் கிம் விளக்கினார்.

“இந்த மூடும் நடவடிக்கை மாநிலத்தில் நிதி பாதிப்பை ஏற்படுத்தவில்லை, ஆனால் மொத்தம் 835 உள்ளூர் தொழிலாளர்கள் மற்றும் 119 வெளிநாட்டு தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர்” என்று இன்று சிலாங்கூர் மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தில் அவர் கூறினார்.

சுங்கை ராமால் சட்டமன்ற உறுப்பினர் மஸ்வான் ஜோஹரின் கேள்விக்குப் பதிலளித்த அவர், வேலை இழந்தவர்களுக்குக் கடந்த ஆண்டு கேரியர் கார்னிவல் சிலாங்கூர் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் பயனடைந்தனர்.

”கோவிட்–19 தொற்றுநோயால் பல தொழிற்துறைகளுக்கு தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அதிக தேவையை ஊக்கமளிக்கும் அளவு நிறைவு செய்ய கேரியர் கார்னிவல் சிலாங்கூர் வேலை வாய்ப்பு திட்டங்கள் ” உதவின என்று தெங் சாங் கிம் விளக்கினார்.



# புதிய முதலீட்டு ஊக்குவிப்பின் வழி கடந்தாண்டு வெ.596 கோடி வெள்ளி பதிவு –சுல்தான் பெருமிதம்




ஷா ஆலம்:–

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் புதிய மற்றும் நடப்பு முதலீடுகளை ஊக்குவிக்க மாநில அரசு மேற்கொண்ட எளிமைப்படுத்தும் நடவடிக்கைகளை மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் பாராட்டினார்.

மாநில அரசின் இந்நடவடிக் கைகளின் வாயிலாகக் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 196 கோடி வெள்ளி மதிப்பிலான 182 தொழிலியல் திட்டங்களைப் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டியதாகச் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கூறினார்.

தொழிலியல் திட்டங்களைப் பொறுத்த வரை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மாநில அரசின் இந்த அடைவு நிலை அதிகமானதாகும். இதன் வழி 12,226 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

இன்று இங்கு 14 வது மாநில சட்டமன்றத்தின் 5 ஆம் தவணைக்கான முதலாவது கூட்டத் தொடரைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# பேரிடர்கள் ஏற்படுவதைத் தவிர்க்க இ.சி.ஆர்.எல்., எம்.ஆர்.டி.3 திட்டங்கள் கண்காணிக்கப்பட வேண்டும்

## - சுல்தான் அறிவுறுத்து

ஷா ஆலம்:

கிழக்குக் கரை இரயில் தடத் திட்டம் (இ.சி.ஆர்.எல்.) மற்றும் இலகு ரக ரயில் திட்டம் 3 (எம்.ஆர்.டி.3) ஆகியவை பொது மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தும் அளவுக்குப் பேரிடரை அல்லது எதிர்மறையான விளைவுகளை உண்டாக்காமலிருப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்திட்டங்கள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு அதன் அமலாக்கத்தைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்ந்து கண்காணித்து வர வேண்டும் என்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கூறினார்.




சமூகவியல் மற்றும் சுற்றுச் சூழல் விளைவுகளைக் கருத்தில் கொண்டு அவ்விரு திட்டங்கள் மீது மிக அணுக்கமான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். சமூகவியல் மற்றும் சுற்றுச் சூழல் அடுத்த தலைமுறையின் சுபிட்சத்திற்குப் பாதகத்தைக் கொண்டு வராமலிருப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இன்று இங்கு 14 மாநில சட்டமன்றத்தின் 5 ஆம் தவணைக்கான முதலாவது கூட்டத் தொடரை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இ.சி.ஆர்.எல். திட்டத்தை வடக்கு தடத்தில் மேற்கொள்ளும் பரிந்துரையை மாநில அரசு ஏற்றுக் கொண்டதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்தாண்டு டிசம்பர் 2 ஆம் தேதி கூறியிருந்தார்.

நாற்பது கிலோ மீட்டர் தொலைவை உட்படுத்திய எம்.ஆர்.டி.3 திட்டம் ஜாலான் டூத்தா, செத்தியாவங்சா, பண்டான் இண்டா, சாலாச் செலத்தான், பண்டார் மலேசியா, கிறிஞ்சி வழியாக மேற்கொள்ளப்படுகிறது.

# 5 மாவட்டங்களில் வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளைச் சீரமைக்க வெ.2.256 கோடி செலவாகும்

ஷா ஆலம்:–

டிசம்பர் மாத இறுதியில் வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை சரிசெய்வதற்கான செலவினம் வெ.2.256 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் சாலை சரிவு வலுப்படுத்தும் பணி சேர்க்கப்படவில்லை.

இந்த எண்ணிக்கை பாதிக்கப்பட்ட ஐந்து மாவட்டங்களில் சாலை பழுது தொடர்பான சிலாங்கூர் பொதுப்பணித் துறையின் (JKR) ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று உள்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஸாம் ஹஷிம் கூறினார்.

"மாரிஸ் (மலேசிய சாலை பதிவு தகவல் அமைப்பு) 2022 ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி, மாநிலத்தில் முன்மொழியப்பட்ட சாலை பழுதுபார்க்கும் பணி வெள்ளத்திற்குப் பிந்தைய உள்கட்டமைப்பு மறுவாழ்வு திட்டத்தின் கீழ் உள்ளது," என்று அவர் கூறினார்.

இன்று சிலாங்கூர் மாநில சட்டமன்ற (டிஎன்எஸ்) அமர்வில் பேரிடர் காரணமாக சிலாங்கூரில் சாலை சீரமைப்பு திட்டம் குறித்து பெர்மாதாங் சட்டமன்ற உறுப்பினர் ரோசானா ஜைனால் அபிடின் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

ஜாலான் சுங்கை லூய், உலு லங்காட் மற்றும் பி 48 ஜாலான் சிப்பாங்–ஜெண்டரம், சிப்பாங்கில் உள்ள பாலம் ஆகியவறுடன் இடிந்து விழுந்த சாலைக் கரையை சரிசெய்வது ஆகியவை முடிக்கப்பட்ட திட்டங்களில் அடங்கும் என்று இந்த விஷயத்தைப் பற்றி விரிவாகக் இஞ்சினியர் இஸாம் கூறினார்.

பெட்டாலிங்கில் உள்ள ஜாலான் ரஹ்மிடின் 2 மற்றும் ஜாலான் பெக்கான் சுபாங்கில் இடிந்து விழுந்த சாலைக் கரையை சீரமைக்கும் பணி பிப்ரவரி 15 ஆம் தேதி தொடங்கியதில் இருந்து நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட பிற பகுதிகளில் பெரும்பாலான ஆய்வுப் பணிகள், இட ஆய்வு மற்றும் சாலை வடிவமைப்பு ஆகியவை நிறைவடைந்து, செயல்முறைக்குக் காத்திருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

# ரவாங், செல்கேட் மருத்துவமனை கட்டுமானம் 45 விழுக்காடு பூர்த்தி

## - சட்டமன்றத்தில் தகவல்



ஷா ஆலம் :–

ரவாங் செல்கேட் மருத்துவமனையின் கட்டுமானம் இவ்வாண்டு பிப்ரவரி மாதம் வரை 45 விழுக்காடு பூர்த்தியடைந்துள்ளதாக பொது சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

கோவிட்–19 பெருந்தொற்று பரவலின் விளைவாக ஏற்பட்ட தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த மருத்துவமனையின் கட்டுமானத்தில் தாமதம் ஏற்பட்டதாக அவர் சொன்னார்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை மற்றும் பொது முடக்கம் 3.0 ஆகிய காரணங்களால் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. மேலும், கட்டுமானத் துறைகளில் அந்நியத் தொழிலாளர் பற்றாக்குறையும் நிலவுகிறது என்று அவர் தெரிவித்தார். இதுதவிர, பொது முடக்கம் காரணமாக அனைத்து துறைகளிலும் ஏற்பட்ட சுணக்கம் கட்டுமானப் பொருள் விநியோகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியதோடு அப்பொருள்களின் விலையும் அபரிமித உயர்வைக் கண்டது என்று அவர் சொன்னார்.

சட்டமன்றத்தில் இன்று ரவாங் உறுப்பினர் சுவா வேய் கியாட் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். ரவாங், செல்கேட் மருத்துவமனையின் கட்டுமானத்தில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் மற்றும் கட்டுமானப் பணியை விரைவாக மேற்கொள்ள மாநில அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து சுவா கேள்வியெழுப்பியிருந்தார். அந்த செல்கேட் மருத்துவமனையை மாநில அரசின் துணை நிறுவனமான செல்கேட் கார்ப்பரேஷன் நிறுவனம் நிர்மாணித்து வருவதாக சித்தி மரியா குறிப்பிட்டார்.

# தாஞ்யா அனிஸ் சிறப்பு தளம் மாற்றுத் திறனாளிப் பிள்ளைகளின் தொடர்பான கேள்விகளுக்கு 24 மணிநேரமும் பதிலளிக்கிறது




ஷா ஆலம்:–

சிறப்புத் தேவைகள் அல்லது மாற்றுத் திறனாளிப் பிள்ளைகள் (OKU) பற்றிய தகவல்களைப் பெற பொதுமக்களுக்கு உதவும் வகையில் தாஞ்யா அனிஸ் ஆன்லைன் தளம் உருவாக்கப்பட்டது.24 மணிநேர யாயாசான் வாரிசான் அனாக் சிலாங்கூர் (யாவாஸ்) முன்முயற்சியில் நிபுணர்கள் மற்றும் வல்லுநர்கள் உள்ளனர், இதில் சமூக நலத் துறையைச் சேர்ந்த ஒரு குழு கேள்விகளுக்கு பதிலளிக்கிறது.

அதன் பொது மேலாளர் கன் பெய் நேய், சமீபத்தில் ஒரு மெய்நிகர் பெற்றோர் மற்றும் ஆசிரியர் கருத்தரங்கின் அமைப்பில் பதிலளிக்கப்படாத பல கேள்விகளுக்குப் பிறகு இந்த யோசனை வந்ததாகக் கூறினார்.

"எந்தவொரு வகை மாற்றுத் திறனாளி பற்றிய பல்வேறு தரப்பினரிடமிருந்து எழும் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க இந்த தளம் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று அவர் தொடர்பு கொண்டபோது கூறினார்.

புறக்கணிக்கப் படக்கூடாது என்பதற்காகவும், எதிர்காலத்தில் இது ஒரு குறிப்பாக இருக்கக் கூடும் என்பதற்காகவும் கேட்கும் நபர்களுக்கு பதில்கள் மின்னஞ்சல் செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தாஞ்யா அனிஸ் தளத்தை www.anisselangor.com/tanyaanis என்ற இணைப்பின் மூலம் அணுகலாம்.

# வெள்ளப் பேரிடர்– மீட்பு பணிக்கு தேவையான சாதனங்களை வாங்க

## ஊராட்சி மன்றங்கள் ஊக்குவிப்பு

ஷா ஆலம் :–

பேரிடரை எதிர்கொள்வதற்கு ஏதுவாக படகுகள் மீட்பு சாதனங்கள் போன்ற பாதுகாப்பு தளவாடங்களை வாங்க ஊராட்சி மன்றங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

நெருக்கடியான நேரங்களில் குறிப்பாக வெள்ளப் பேரிடரின் போது ஊராட்சி மன்றங்கள் துரிதமாக செயல்பட இந்நடவடிக்கை உதவும் என்று மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.



பேரிடர் அல்லது நெருக்கடியான சூழலை சிறப்பான முறையில் எதிர் கொள்வதற்கு ஏதுவாக பேரிடர் சார்ந்த விவகாரங்களை சரி செய்ய மாநில அரசு தொடர்ந்து முயன்று வருகிறது. பேரிடர் (டிசம்பர் மாத வெள்ளம்) மீண்டும் நிகழ்வதைக் காண நாம் விரும்பவில்லை என்றார் அவர்.

மாநில சட்டமன்றத்தில் நேற்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றம் மற்றும் சுபாங் ஜெயா மாநகர் மன்றம் ஆகிய ஊராட்சி மன்றங்கள் இத்தகைய தளவாடங்களை வாங்கி விட்டதாக அவர் தெரிவித்தார்.

தேவைப்படும் போது பயன்படுத்துவதற்கு ஏதுவாக உபகரணங்கள் மற்றும் தளவாடங்களை பாதுகாப்பான இடத்தில் வைப்பதும் இந்த நடவடிக்கைகளில் அடங்கும் என அவர் சொன்னார்.

கடந்தாண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி மாநிலத்தில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தில் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டதோடு பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.




# பள்ளி பஸ் நடத்துநர்கள்

## உபரி வருமானம் பெற வழி ஏற்படுத்துவீர்

## குணராஜ் வேண்டுகோள்

ஷா ஆலம்:–

பள்ளி பஸ் நடத்துநர்கள் உபரி வருமானம் பெறுவதற்கு ஏதுவாக மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்குமாறு போக்குவரத்து அமைச்சை செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

பள்ளி பஸ்களின் பராமரிப்புக்கு அதன் உரிமையாளர்கள் பெரும் தொகையைக் செலவிட்டுள்ள நிலையில் பெற்றோர்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவு ஊக்கமளிக்கும் வகையில் இல்லை என்று அவர் சொன்னார். பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளி பஸ் மூலம் அல்லாமல் சொந்தமாக பள்ளிக்கு அனுப்புவதில் முனைப்பு காட்டுவது இதற்கு காரணமாக இருக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

ஆகவே, பள்ளி பஸ் நடத்துநர்கள் உபரி வருமானம் பெறுவதற்கு ஏதுவாக பஸ்களை வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்த போக்குவரத்து அமைச்சு அனுமதிக்க வேண்டும். இதற்கான அனுமதி வழங்கும் அதிகாரம் பொது தரைப் போக்குவரத்து ஆணையத்தின் விதிகளுக்கு உட்பட்டுள்ளது என்று அறிக்கை ஒன்றில் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் கோவிட்–19 பெருந்தொற்று பரவியது முதல் பல பள்ளி பஸ் நடத்துநர்கள் பெரும் போராட்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இது தவிர கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளமும் அவர்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படத்தியுள்ளது என்றார் அவர்.

எனவே. பள்ளி பஸ்களை பயணிகளை ஏற்றுவது அல்லது சிறிய அளவிலான பொருள்களை ஏற்றுவது உள்ளிட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்த அனுமதிப்பதன் வழி அவர்களின் பொருளாதார சுமையைக் குறைப்பதற்கும் பஸ்களுக்கான மாதாந்திர தவணைக் கட்டணத்தை செலுத்துவதற்கும் உதவ முடியும் என அவர் மேலும் சொன்னார்.

# பசுமைப் பள்ளி விருது 2022

## சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை ஊக்குவிக்கிறது

ஷா ஆலம்:–

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முயற்சிகளில் ஒன்றாக, பசுமைப் பள்ளி விருதுகள் 2022 திட்டத்தை ஏற்பாடு செய்யக் காஜாங் முனிசிபல் கவுன்சில் (எம்பிகேஜே) முன்முயற்சி எடுத்துள்ளது.

ஆரம்பப் பள்ளிகள் மற்றும் இடைநிலைப் பள்ளிகள் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் பங்கேற்புடன் அதன் நிர்வாகப் பகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் இந்தத் திட்டத்தில் பங்கேற்கலாம் என்று எம்பிகேஜே தெரிவித்துள்ளது.

விருது வென்றவர்களுக்குக் கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் தவிர முதல் இடத்துக்கு வெ.1,000, வெ.800 (இரண்டாவது), வெ.500 (மூன்றாவது), வெ.300 (நான்காவது) மற்றும் வெ.200 (ஐந்தாவது) பரிசு வழங்கப்படும். "விருதுக்கான நுழைவுப் படிவம் மற்றும் தகவல் காட்டப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் ஆலோசனை பெறலாம். உங்கள் நுழைவுப் படிவத்தை ஏப்ரல் 29, 2022 அன்று அல்லது அதற்கு முன் அனுப்ப மறக்காதீர்கள், "என்று அவர் பேஸ்புக்கில் தெரிவித்துள்ளார்.

பதிவுக்கான கடைசித் தேதி அக்டோபர் 28 மற்றும் மதிப்பீட்டு செயல்முறை அடுத்த நவம்பரில் நடைபெறும், அதே நேரத்தில் பரிசு வழங்கும் தேதி டிசம்பர் 2022 இல் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், QR குறியீட்டை ஸ்கேன் செய்த பிறகு கிடைத்த தகவலின் அடிப்படையில், பள்ளி பசுமைப் பள்ளியின் பண்புகள் தொடர்பான செயல்பாட்டு அறிக்கை மற்றும் அது தொடர்பான வீடியோக்களை 10 நிமிடங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.




மறுசுழற்சி, புதுமை மற்றும் படைப்பாற்றல், தூய்மை, பசுமை மற்றும் விளக்கக்காட்சி அதாவது வீடியோ அறிக்கை போன்ற வெற்றியாளர்களைத் தீர்மானிப்பதில் மொத்தம் ஐந்து மதிப்பீட்டு அளவுகோல்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

### சிலாங்கூர் வளமான வாழ்க்கை உதவி (பிங்காஸ்)



- தகுதியுள்ள குடும்பங்களுக்கு மாதம் வெ.300
- வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கவும், கட்டணம் செலுத்தவும் மற்றும் குழந்தைகளின் கல்வி
- வெ.10.8 கோடி ஒதுக்கீட்டில் 180,000 பயனாளிகள் எதிர்பார்க்கப்படுகிறது

### முதியவர்கள் நட்பு திட்டம் (SMUE)

- பிறந்த மாதத்தில் வெ.100 ஷாப்பிங் வவுச்சர்
- இறப்பு நன்மை வெ.500
- வெ. 2.75 கோடி ஒதுக்கீடு

### அனாக் சிலாங்கூர்க்கான திட்டம்

- சிலாங்கூரில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்காகப் பிரதம தேசியக் கல்வி சேமிப்புச் சான்றிதழ் (SSPN) கணக்கைத் தொடங்குதல்
- ஐந்து வருடக் காலத்திற்கு ஆண்டுக்கு வெ.100 வழங்கப்படும்
- வெ.30 லட்சம் ஒதுக்கீடு

### கோவிட்-19 ஆதரவற்றோர் உதவி

- வெ.12.5 லட்சம் நிதி பங்களிப்பு
- 2,500 ஆதரவற்ற குழந்தைகள் பயனடைவர்
- கோவிட்–19 காரணமாகத் தாய் அல்லது தந்தையை இழந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு வெ.500
- சமூக நலத்துறை, மாநிலச் சுகாதாரத் துறை மற்றும் பிற பிரிவுகளுடன் ஒன்றிணைந்து எஸ்டேட் நிர்வாகம், குழந்தை பராமரிப்பு மற்றும் மனச் சுகாதார உதவி

### கோவிட்-19க்குப் பின் மலிவு விலையில் வீடு கட்டும் சலுகைகள்

- குறைந்தபட்சம் 1,000 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு வீடு, ஒரு யூனிட்டுக்கு வெ.250,000க்கு மிகாமல் விற்பனை விலையில்
- குளிரூட்டி, தொலைக்காட்சி அலமாரி, சமையலறை அலமாரி, துணி அலமாரி மற்றும் நீர் ஹீட்டர் உள்ளிட்ட அடிப்படை வீட்டுப் பொருட்களுடன் பொருத்தப்பட்டுள்ளது

### நகர்ப்புறக் குடியேறிகளின் உறுதிப்பாடு



- கட்டுப்படியாகக்கூடிய வீட்டு வசதி அறக்கட்டளை நிதி மூலம் வெ.1.077 கோடி ஒதுக்கீடு
- யூனிட் வாங்குவதற்கு நான்கு வருடக் காலத்திற்குப் பிறகு S2-OWN உரிமையாளர் ஆவது.

### சிலாங்கூர் குறைந்த விலை அடுக்குமாடி காப்பீடு

- இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் சேதச் செலவை அடுக்குமாடி நிர்வாகக் குழு ஏற்க உதவி
- தீ, புயல் அல்லது பலத்த காற்றினால் ஏற்பட்ட சேதம், தண்ணீர் தொட்டி நிரம்பி வழிவதால் சேதம் மற்றும் லிஃப்ட் சேதம் காரணமாகக் காப்பீட்டு நிறுவனத்திடம் (தக்காஃபுல்) இழப்பீடு வழங்க உதவி
- 238,403 யூனிட் குறைந்த விலை அடுக்குமாடி வீடுகளால் பலன்
- 15 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்படும்

### வாழ்நாள் முழுவதும் கற்றல் திட்டம்



- சிலாங்கூர் சக்திவாய்ந்த பெண்கள் வாழ்நாள் கற்றல் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது
- டிப்ளமோ, இளங்கலை மற்றும் முதுகலை நிலைகளில் படிப்பைத் தொடரவும்
- குறிப்பாகச் சிலாங்கூர் பெண்களுக்கான திறந்த பல்கலைக்கழக மலேசியா (OUM) ஒத்துழைப்பு
- ஆண்டுக்கு வெ.200,000 ஒதுக்கீடு வழங்கப்படுகிறது

### சிலாங்கூர் சிறப்பு

### குழந்தைகளுக்கான திட்டம் (AnIS)

- AnIS கல்வியாளர்களின் திறனை வளர்ப்பதற்காக AnIS கலைக்கூடம் நிறுவப்பட்டது
- டிடேக் AnIS திட்டத்தின் மூலம் ஆரம்பகாலத் தலையீடு திட்ட மையம் (EIP) மற்றும் சமூக மறுவாழ்வு திட்டத்திற்கு (PPDK) நிதி உதவி வழங்கவும்
- 30 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது

10. மாநில வறுமை ஒழிப்பு உதவித் திட்டம்
20 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்படும்
ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் வெ.10,000

### சிலாங்கூர் சட்ட உதவி நிதி



- சட்ட உதவி பெற வசதியற்றவர்களுக்கு உதவுங்கள்
- வீட்டு வன்முறை மற்றும் B40 குடிமக்களுக்கு வேலை இழப்பு தொடர்பான வழக்குகளில் உதவுதல்
- 10 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்படும்
- சிலாங்கூர் பார் கவுன்சில் மற்றும் சிலாங்கூர் சட்ட உதவி மையம் இடையே ஒத்துழைப்பு

## திட்டம் 2: அக்கறையுள்ள சமுதாயத்தையும் சமூக நலனையும் உருவாக்குதல்

(ஒரு பகுதி)

### உள்நாட்டு வளர்ச்சி

- வெ.15 லட்சம் ஒதுக்கீடு
- ஏழைப் பழங்குடி மக்கள் வீடுகளைக் கட்ட, பழுது மற்றும் மேம்படுத்த
- பழங்குடி மக்கள் குடியிருப்புகளுக்குத் தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்படும்

### சிலாங்கூர் இளைஞர் ஊக்குவிப்பாளர் (PeBS)



- PeBS திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளுக்காக வெ.28 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது
- அடித்தட்டு இளம் தலைமுறையினரின் வளர்ச்சிக் கொள்கையைச் செயல்படுத்த மாநில அரசின் இயந்திரமாகச் செயல்படுகிறது

### மின் விளையாட்டு

- 12 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது

### ரோடா டாருல் ஏசான் (RiDE)

- 20 லட்சம் ரிங்கிட் ஒதுக்கீடு

### விளையாட்டு உள்கட்டமைப்பின் கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்பு



- 40 லட்சம் ரிங்கிட் ஒதுக்கீடு
- வெ.100,000 மதிப்பு வரம்புடன் ஒவ்வொரு மாநிலச் சட்டமன்றத்திலும் சேதமடைந்த விளையாட்டு உள்கட்டமைப்பைச் சரிசெய்தல்

### அடிமட்ட அளவிலான லீக்

- இளைஞர்களின் விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும்
- அடிமட்ட அளவிலான லீக்கைச் செயல்படுத்துவதற்கு வெ.10 லட்சம்

### 18.சிலாங்கூர் மாணவர்களுக்கான திட்டம்.

- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த புதிய மாணவர்களுக்கு வெ.1,000 உதவி
- மொத்தம் வெ.30 லட்சம் ஒதுக்கப்படும்

### சிலாங்கூர் அடிப்படை தொழில்நுட்பக் கடன் திட்டம் (SEPINTAS)

- சிலாங்கூர் பொது நூலகத்துடன் கூடிய **SmartSel (PPAS)** டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்துகிறது
- பள்ளி மாணவர்களுக்கும் இளங்கலை பட்டதாரிகளுக்கும் கடனாக வழங்க வேண்டும் 10 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது

### மக்கள் கல்வித் திட்டம் (PTRS)

- 70 லட்சம் ரிங்கிட் ஒதுக்கீடு நேருக்கு நேர் செயல்படுத்தினால், மதிய உணவு
- உதவிப் பொதி வழங்கப்படும்

### மாநில அரசின் உயர்கல்வி நிறுவனங்களுக்குப் பலப்படுத்தல்.

- நிர்வாகம், திறன் மேம்பாடு மற்றும் ஆசிரியர் பணியாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் போட்டித் திறன் ஆகியவற்றின் அம்சங்களை உள்ளடக்கியது
- தொழில்துறை ஒத்துழைப்பை மேம்படுத்துதல், கற்பித்தல் வசதிகள் மற்றும் மாணவர் மேம்பாடு
- IPT களின் அதிகாரமளிப்பதற்காக வெ.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது
- ஒன்றுபட்ட கற்றலுக்குப் பயன்படுத்த மாணவர்கள் இணையத் தரவை வழங்க யுனிசெல்க்கு வெ.30 லட்சம்

### சிலாங்கூர் ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு கவுன்சில் (MPIS)



- ஒற்றுமை பிரச்சினைகளில் ஒரு சிறப்பு ஆலோசனை அமைப்பாக இருக்க வேண்டும்
- ஒற்றுமைக் கொள்கை மற்றும் சிலாங்கூர் மாநிலச் செயல் திட்டத்தைச் செயல்படுத்துவதைக் குறித்த குறிப்பிட்ட கண்காணிப்பு
- வெ.400,000 ஒதுக்கப்படும்

### சிலாங்கூர் சக்திவாய்ந்த பெண்கள்

- 50.3 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது
- அடிமட்ட அளவில் பெண்களின் தலைமையைப் பயிற்றுவித்தல்
- முழுத் தொகுதி மற்றும் பெண்கள் தலைமைத்துவக் கலைக்கூடத்தை உள்ளடக்கியது

### குடும்ப வன்முறையைக் கையாள்வது

- பெண்கள் பாதுகாப்பு மையத்திற்கு ஒத்துழைப்பு மற்றும் உதவிக்காக வெ.200,000 ஒதுக்கப்பட்டுள்ளது.
- குடும்ப வன்முறை வழக்குகளில் ஈடுபடும் பெண்களைப் பாதுகாக்க வேண்டும்

### இளம் தலைமுறை வளர்ச்சி மற்றும் விளையாட்டுவெ.1.449 கோடி ஒதுக்கீடு

- சிலாங்கூர் இளைஞர் கொள்கை 2020 உருவாக்குவதன் மூலம் சிலாங்கூர் இளைஞர் கொள்கை 2014ஐ மேம்படுத்தவும்

### சுதந்திர வாழ்க்கைக்கான மையம் (ILC)

- ஊனமுற்ற குழுக்களுக்கு வேலைப் பயிற்சி மற்றும் அதிகாரமளிப்பதற்காக உருவாக்கப்பட்டது
- இந்த மையத்தை உருவாக்க வெ.10 லட்சம் செலவிடப்படும்

### சம்பந்தப்பட்ட அரசாங்க நிகழ்ச்சி நிரல்

- மொத்தம் வெ.6.525 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது
- மக்களின் தேவைகள் மற்றும் நலன்களைக் கவனிப்பதற்கான முயற்சிகளை மேம்படுத்துதல்
- நலத்திட்டங்கள் மூலம் செய்யப்படுகிறது.

### கவனிப்பு அரசு வீடு கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் திட்டம்

- இந்த ஆண்டுக்குக் கூடுதலாக வெ.12 லட்சம்
- பெறுநர்களிடையே சமூக–பொருளாதாரத்தை மறுசீரமைக்கவும், பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் உதவுகிறது.

# ரவாங் பள்ளிக்கு அருகில், பாதசாரிகள் பாலத்தின் கூரையைச் சரிசெய்ய மக்கள் பிரதிநிதிகள் வெ.30,00



ஷா ஆலம் :–
ரவாங் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் செலாயாங் எம்.பி ஆகிய இருவரும் ரவாங்கில் உள்ள தாமான் பெர்சத்துவில் 2 ஆண்டுகளுக்கு முன் சேதமடைந்த பாதசாரிகள் பாலத்தின் சேதமடைந்த மேற்கூரையைச் சரிசெய்ய வெ.30,000 ஒதுக்கீடு செய்துள்ளனர்.

ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறுகையில் ஒவ்வொரு நாளும் அதைப் பயன்படுத்தும் மக்களின் பாதுகாப்பிற்காகத் தங்கள் சொந்த ஒதுக்கீட்டை வெளியிட முயற்சி எடுத்ததாகக் கூறினார்.

அவர் கூறுகையில், கம்போங் சுங்கை தெரெந்தாங்கில் உள்ள சான் யுக் தேசிய வகை சீனப் பள்ளிக்கு முன்பாக அமைந்துள்ள பாலம் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் முக்கிய நடை பாதையாக இருப்பதால் சேதமடைந்த கூரை ஆபத்தானது.

“சேதமடைந்து ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாகிறது, ஆனால் இப்போது வரை பழுதுபார்க்கும் பணிக்காகப் பொதுப்பணித் துறை (ஜேகேஆர்) ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் தரவில்லை.

“அதனைப் பயன்படுத்தும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர் வில்லியம் லியோங் ஜீ கீன் மற்றும் தானும் பாலத்திற்குப் புதிய கூரையை மாற்ற எங்கள் ஒதுக்கீட்டைப் பயன்படுத்த ஒப்புக்கொண்டோம்,” என்று அவர் தொடர்பு கொண்டபோது கூறினார்.

ஜே.கே.ஆர் கோம்பாக் மூலம் பழுதுபார்க்கும் பணிகள் இந்த ஏப்ரலில் தொடங்கி உடனடியாக முடிக்கப்படும் என்று ரவாங் சட்டமன்ற உறுப்பினரான வேய் கியாட் கூறினார்.

“மக்களின் பாதுகாப்பு மற்றும் வசதியை உள்ளடக்கிய உள்கட்டமைப்பு பழுதுபார்ப்புக்கான சிக்கலான செயல்முறையை மத்திய அரசு குறைக்க வேண்டும் என்று தாங்கள் கேட்டுக்கொள்வதாக,” அவர் கூறினார்.

# வடிகால்களில் துப்புரவுப் பணி ஆண்டுக்கு 4 முறை மேற்கொள்ளப்பட வேண்டும்

## பெர்மாத்தாங் உறுப்பினர் கோரிக்கை



ஷா ஆலம்:–
வடிகால்களில் வளர்ந்துள்ள செடி கொடிகளை அப்புறப்படுத்தும் பணி ஆண்டுக்கு மூன்று முறை அல்லாமல் நான்கு முறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையின் மூலம் மழை காலங்களில் நீர் பெருக்கெடுப்பதை தவிர்க்க முடியும் என்று பெர்மாத்தாங் தொகுதி உறுப்பினர் ரோஸானா ஜைனால் அபிடின் கூறினார்.

தற்போது பருவ நிலை நிலையற்றதாக உள்ளதோடு அடிக்கடி மழையும் பெய்வதால் தனது இந்த பரிந்துரை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கால்வாய்களில் உள்ள புற்கள் வேகமாக வளர்ந்து நீரோட்டத்திற்கு தடையை ஏற்படுத்துவதால் மழை காலங்களில் நீர் பெருக்கெடுக்கிறது.

இதனால் மக்கள் அச்சம் கொள்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

மாநில சட்டமன்றத்தில் இன்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு சொன்னார்.

# செந்தோசா சட்டமன்றம் மாணவர்களுக்கு இலவச முடிதிருத்தும் திட்டத்தை ஏற்பாடு செய்தது



ஷா ஆலம்:–
அடுத்த வாரம் பள்ளி தொடங்குவதையொட்டி, செந்தோசா சட்டமன்றம் 500 பள்ளி மாணவர்களை உள்ளடக்கிய இலவச முடிதிருத்தும் நிகழ்ச்சியை நடத்தியது.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறுகையில், நேற்று முதல் கட்டமாக நடத்தப்பட்ட இந்தத் திட்டம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் பங்கேற்பை இலக்காகக் கொண்டது.

“இந்த முயற்சியானது, தங்கள் குழந்தைகளின் பல்வேறு பள்ளித் தேவைகளுக்குத் தயாராகும் பெற்றோரின் சுமையைக் குறைக்கும் என்று நம்பப்படுகிறது.

“கம்போங் ஜாவாவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 50 மாணவர்களும், நேற்று தாமான் செந்தோசா அல் பராக் பள்ளிவாசலில் 70 மாணவர்களும் இருந்தனர். இந்த நிகழ்ச்சி அடுத்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மீண்டும் நடைபெறும்,” என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

இந்தத் திட்டம் மாணவர்களுக்குப் பயன் தருவது மட்டுமின்றி முடிதிருத்தும் தொழிலாளிகளுக்கு வருமானம் ஈட்ட உதவியது என்றார்.

“இந்தத் திட்டத்தில், நான்கு முடிதிருத்தும் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். கோவிட்–19 தொற்றுநோய்களின் போது அவர்கள் பாதிக்கப்பட்டனர், எனவே இப்போது அவர்களின் வாழ்க்கையை நிலைப்படுத்த உதவ விரும்புகிறோம்.

“அடுத்த வாரத்திற்கு, ஆர்வமுள்ள பெற்றோர்கள் கிராமத் தலைவர் அல்லது சமூகம், கவுன்சில் உறுப்பினர்களிடமிருந்து தகவலைப் பெறலாம் மற்றும் சட்டமன்றச் சேவை மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்” என்று அவர் கூறினார்.

# கவர்ச்சி, பிரகாசமான எல்இடி தெரு விளக்குகளுக்கு வெ.36 லட்சம்

ஷா ஆலம் :–
அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் ஒளி உமிழும் (எல்இடி) தெரு விளக்குகளின் விநியோகத்தை அதிகரிக்கச் சிலாங்கூர் அரசாங்கம் RM36 லட்சம் நிதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த வசதி ஒவ்வொரு சட்டமன்ற பிரதிநிதிக்கும் வழங்கப்படும், என்றும், அவர்கள் நிறுவல் தேவைப்படும் பகுதிகளைக் தேர்ந்தெடுப்பார்கள் என்றும் உள்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் ஆட்சிக்குழு உறுப்பினர் இஸாம் ஹாஷிம் கூறினார்.

“ஒரு யூனிட் வெ.8,000 முதல் வெ.10,000 வரையிலான விலையில் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சமீபத்திய வடிவமைக்கப் பட்ட தெரு விளக்குகளின் 10 யூனிட்களை வழங்க நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.



“இருப்பினும், இது இறுதி டெண்டரைப் பொறுத்தது, ஆனால் நாங்கள் வெ.36 லட்சம் தொகையை நிர்ணயித்துள்ளோம். எனவே, அவர்கள் விரும்பும் எந்தச் சாலையையும் விளக்குகளால் ஒளிரச் செய்ய முடியும்,” என்று அவர் கூறினார். இன்று சிலாங்கூர் மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தில் சிலாங்கூர் சுல்தான் ஷராபுதீன் இட்ரிஸ் ஷா அல்ஹாஜின் மாட்சிமை சுல்தான் ஆணையின் நிறைவு அமர்வில் அவர் இவ்வாறு கூறினார்.

முன்னதாக, நேற்று தொடங்கிய விவாத அமர்வில் மொத்தம் 23 மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர், போர்ட் கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிசாம் ஜமான் ஹுரி இந்த விஷயத்தில் கேள்விகளை எழுப்பினார்.

# வெள்ளத்திற்குப் பிந்தைய குப்பைகளைப் பிரித்தெடுப்பது இயலாத காரியம்

## இங் ஸீ ஹான் கூறுகிறார்



ஷா ஆலம்:–

சிலாங்கூரில் வெள்ளத்திற்குப் பின்னர்க் குவிந்த 48,000 மெட்ரிக் டன் குப்பைகளைப் பிரித்தெடுக்கும் பணிகளைக் கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனம் மேற்கொள்வது இயலாத காரியம் என மாநிலச் சட்டமன்றத்தில் கூறப்பட்டது.

அந்தக் குப்பைகளில் பல்வேறு பொருள்கள் கலந்திருந்த காரணத்தால் அவற்றைத் தரவாரியாகப் பிரிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

மாநில அரசின் உத்தரவுகேற்ப பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து குப்பைகளை விரைந்து அகற்றுவதே அந்த நிறுவனத்தின் தலையாய பணியாக இருந்தது என்று அவர் சொன்னார். அந்த .குப்பைகளில் பல்வேறு பொருள்கள் கலந்து துர்நாற்றம் வீசியதோடு சகதியும் சேர்ந்திருந்த காரணத்தால் அதனைத் தரம் பிரிப்பது சிரமமானது என்பதோடு நடைமுறைக்கும் சாத்தியமற்றதாகவும் இருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

மாநிலச் சட்டமன்றத்தில் இன்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சட்டமன்றத்தில் பேசிய செமந்தா உறுப்பினர் டாக்டர் டோரோயா அல்வி, கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனம் மற்றும் ஊராட்சி மன்றங்கள் மேற்கொண்ட துப்புரவுப் பணியில் குப்பைகளைப் பிரித்தெடுக்கும் விவகாரம் கவனத்தில் கொள்ளப்படவில்லை எனக் கூறியிருந்தார்.

அந்த இயற்கைப் பேரிடரின் போது சமூகவியல் விளைவுகளுக்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டதாக இங் மேலும் குறிப்பிட்டார்.

# பிளாட்ஸ் இணைய வர்த்தகத் திட்டத்தில்




8,000 பேர் பங்கேற்பு

ஷா ஆலம்:–

பிளாட்ஸ் எனப்படும் சிலாங்கூர் பிளாட்ஃபார்ம் திட்டத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை சுமார் 7,742 வர்த்தகர்கள் பதிவு செய்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இணைய வர்த்தகத்தில் பங்கேற்க வர்த்தகர்களை ஊக்குவிப்பதற்காக நியமிக்கப்பட்ட ராக்கான் டிஜிட்டல் சிலாங்கூர் குழுவின் முயற்சியால் இந்த வளர்ச்சி காணப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

ரமலான் மாதத்தில் மட்டுமின்றி அதன் செயலாக்க காலம் முழுவதும் வர்த்தகர்களுக்கு உதவக்கூடிய ஒரு விளம்பர தளம் மற்றும் இலக்கவியல் வழிகாட்டியாக விளங்கும் நோக்கில் இந்த பிளாட்ஸ் தளம் உருவாக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

மாநில சட்டமன்றத்தில் நேற்று மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் குறிப்பாக சிலாங்கூரில் உள்ள வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் இந்த தளம் அறிமுகப்படுத்தப்பட்டதாக அமிருடின் சொன்னார்.

இந்த இலக்கவியல் முயற்சி பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வாக விளங்குகிறது. மேலும் வர்த்தகர்கள் தங்கள் வணிகத்தை தொடர்வதற்கும் அவர்களின் விற்பனை வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும் கூடுதலாக இந்த தளத்தை நாங்கள் தயார் செய்கிறோம் என்றார் அவர்.

# சிலாங்கூரில் விவாகரத்து அதிகரிப்பு

## காரணங்களைப் பட்டியலிட்டார் ஆட்சிக் குழு உறுப்பினர்

ஷா ஆலம்:–

சிலாங்கூரில் தம்பதியரிடையே விவாகரத்து அதிகமாக இருப்பதற்குக் கிள்ளான் பள்ளத்தாக்கில் காணப்படும் அடர்த்தியான மக்கள் தொகை, சுற்றுப்புறச் சவால்கள் உள்ளிட்டவை காரணமாக உள்ளதாக மாநிலச் சட்டமன்றத்தில் இன்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2021 ஆம் ஆண்டில் சிலாங்கூர் இஸ்லாமியச் சமய இலாகாவின் தரவுகளின்படி 6,299 விவாகரத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இஸ்லாமியச் சமய



விவகாரங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது ஜவாவி அகமது முக்னி கூறினார்.

பெட்டாலிங் மாவட்டத்தில் மிக அதிகமாக 1,668 விவாகரத்துகள் பதிவு செய்யப்பட்டதாகக் கூறிய அவர், அதற்கு அடுத்த நிலையில் உலு லங்காட், கோம்பாக், கிள்ளான், கோலச் லங்காட், சிப்பாங், கோல சிலாங்கூர், உலு சிலாங்கூர், சபா பெர்ணம் ஆகிய மாவட்டங்கள் உள்ளன என்றார்.

ஷரியா நீதிமன்றத்தின் கூற்றுப்படி கிள்ளான் பள்ளத்தாக்கில் காணப்படும் அடர்த்தியான மக்கள் தொகை மற்றும் சுற்றுப்புறச் சவால்கள் காரணமாக விளங்குகிறது என்று அவர் தெரிவித்தார்.மாநிலச் சட்டமன்றத்தில் இன்று சிலாங்கூரில் பதிவாகும் விவாகரத்துகள் குறித்துச் சபா உறுப்பினர் அகமது முஸ்தாயின் ஒத்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

# 2025ல் வறட்சி ஏற்படும் எனக் கணிக்கப்பட்டுள்ளது,

## சிலாங்கூர் நீர் ஆதாரங்களை முன்கூட்டியே தயார்படுத்த திட்டமிட்டுள்ளது

ஷா ஆலம் :–

2025–ல் ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ள வறட்சியின் போது அப்போதைய நீர் தேவையைப் பூர்த்தி செய்வதில் நீர்வள மேலாண்மை நிர்வாகம் மற்றும் மாநில அரசும் முழுமையாக கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

அணைகளில் இருந்து வெள்ள நீர் மற்றும் உபரி நீரைச் சேகரிக்கத் திட்டமிடுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று உள்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஸாம் ஹஷிம் கூறினார்.

“சிலாங்கூர் நீர் மேலாண்மை வாரியம் (லுவாஸ்) மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகளைப் பட்டியலிடுவதன் மூலம் சேமிப்பு மேம்பாட்டைச் செயல்படுத்தியுள்ளது.

“வறண்ட காலங்களில் மாற்று நீர் ஆதாரங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகள் மற்றும் தற்போதுள்ள குளம் நீர் உந்தி இயக்கத்தின் (OPAK) கீழ் நீர்த்தேக்கக் குளங்களை நாங்கள் பயன் படுத்துவோம்,” என்று அவர் கூறினார்.

இன்று சிலாங்கூர் மாநிலச் சட்டமன்ற (டிஎன்எஸ்) அமர்வில் சிலாங்கூர் சுல்தான் ஷராபுதீன் இட்ரிஸ் ஷா அல்ஹாஜின் மாட்சிமை சுல்தான் ஆணையின் நிறைவு அமர்வில் அவர் இவ்வாறு கூறினார்.

நேற்றைய விவாத அமர்வின் போது சுங்கை ஆயர் தாவார் சட்டமன்ற உறுப்பினர் டத்தோ ரிசாம் இஸ்மாயில் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் குறித்து மாநில அரசிடம் விளக்கம் கேட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த இஸாம், பின்னர்த் தேவைப்படும் போது செயல்படும் வகையில் குழாய்கள் மற்றும் குழாய் அமைப்புகள் போன்ற நீர் வழங்கல் தொடர்பான அனைத்து உள்கட்டமைப்புகளையும் தனது தரப்பு ஆய்வு செய்யும் என்றார்.

கனிமங்கள் மற்றும் புவி அறிவியல் துறையுடன் இணைந்து லுவாஸ் நிலத்தடி நீரின் ஆதாரத்தை நீர் ஆதாரமாகப் பயன்படுத்துவதையும் அடையாளம் கண்டுள்ளது என்று அவர் கூறினார்.

“பெங்குருசன் ஆயர் சிலாங்கூர் எஸ்டிஎன் பிஎச்டி உடன் மாநில அரசு, விவேகமான நீர் பயன்பாட்டை உறுதி செய்வதற்காக நீர் சேமிப்பு பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தும்

# தாமான் செந்தோசா ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயம்

# ஈகையின் உருவாய் இறைவனின் திருத்தலம்

ஒரு ஆலயத்தின் தனித்துவமும் பிரசித்தியும் அதன் பிரமாண்டத் தோற்றம் மற்றும் கலை வேலைப்பாடுகளைக் கொண்டு மதிப்பிடப்படும். இதுவே வழக்கமான நியதியாகவும் உள்ளது.

இந்த நியதிக்கு மாறாகப் பக்தி மார்க்கத்திற்குப் பங்கம் வராமல் பக்தர்களுக்கு ஆற்றும் சேவையைத் தனித்துவத்திற்கான மதிப்பீடாகக் கொள்ளும் ஆலயங்களும் உண்டு.

அந்த வகையில் மக்கள் சேவையைத் தங்களின் தனித்துவமாகக் கொண்ட ஆலயங்களில் ஒன்றாக விளங்குகிறது கிள்ளான், தாமான் செந்தோசா, ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஆலயம்.

## மக்கள் சேவையில் பிரமாண்டமான ஆலயம்

நாட்டில் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் ஒன்றான கிள்ளான், தாமான் செந்தோசாவின் மையப்பகுதியில் வீற்றிருக்கும் இந்தத் திருத்தலம் சுற்றுவட்டாரத்திலுள்ள முப்பதாயிரம் இந்துக்களின் பிரதான வழிபாட்டு தலமாக விளங்கி வருகிறது.

சுமார் அரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் பிரமாண்டத் தோற்றம் நம்மைப் பிரமிக்க வைக்கிறது. பக்தி பரவசத்தில் அம்மனின் அருள் வேண்டி வணங்கவும் வைக்கிறது..

கோவிட்–19 பெருந்தொற்று, வெள்ளம் என இயற்கைப் பேரிடர்கள் இடைவிடாமல் மக்களைத் துரத்தும் நிலையில் அவர்களுக்கு இயன்ற உதவிகளை வழங்குவதை இறைப்பணியாய்ச் சிரமேற்று மேற்கொண்டு வருகின்றனர் இந்த ஆலய நிர்வாகத்தினர்.

கடந்த 2008 ஆம் ஆண்டில் 35 லட்சம் வெள்ளி செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஆலயம் வெறும் ஆன்மீகக் கூடமாக மட்டும் அல்லாமல் சமூக மையமாகவும் செயல்படுவதை உறுதி செய்வதே தங்களின் பிரதான இலக்கு என்கிறார் ஆலயத் தலைவர் எஸ்.சந்திரசேகரன்.இந்த ஆலயத்தின் சமய, சமூகப் பணிகளையும் கோவிட்–19 பெருந்தொற்று, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளையும் அவர் நம்மோடு பகிர்ந்து கொண்டார்

## சட்டமன்றச் சேவை மையத்துடன் இணைந்து 5,000 பேருக்கு உணவு

கடந்த 2020 தொடக்கத்தில் கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணைப்பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மார்ச் மாதம் தொடங்கித் தொடர்ச்சியாக 73 நாட்கள் ஆலயத்தில் உணவு சமைத்துத் தினமும் 500 குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கினோம். மேலும் பொது முடக்கக் காலத்தில் ஆலய நிர்வாகத்தின் தனிப்பட்ட முயற்சியில் 300க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட் பொட்டலங்களை



விநியோகம் செய்தோம். இது தவிர, அக்காலக்கட்டத்தில் தாமான் செந்தோசா சுற்றுவட்டாரங்களில் உள்ள சுமார் 5,000 குடும்பங்களுக்குத் தொகுதி சட்டமன்றச் சேவை மையத்துடன் இணைந்து உணவுப் பொட்டலங்களை வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

அதோடு மட்டுமின்றி ஆலய நிர்வாகம் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் அவர்களின் ஆதரவுடன் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் 300 வசதி குறைந்தவர்களுக்கு மதிய உணவை வழங்கி வருகிறது.

## தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்குப் பள்ளி புத்தகங்கள்

இந்த உணவு வழங்கும் நிகழ்வின் போது டாக்டர் குணராஜ் ஜோர்ஜ், இந்து சமூக நலச் சங்கம் மற்றும் சுற்றுவட்டார ஆலயங்களின் ஒத்துழைப்புடன் வட்டார மக்கள் எதிர்நோக்கும் அடையாளக் கார்டு, பிறப்புப் பத்திரம், குடும்பப் பிரச்னை, வேலையின்மை, பிள்ளைகளின் கல்வி உள்ளிட்ட பிரச்னைகளைக் கேட்டறிந்து தீர்வு காணும் பணியும் ஆலயத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

ஆகச் சமீபத்தில் தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளியில் பயிலும் 60 மாணவர்களுக்குப் பள்ளி புத்தகங்கள், டி–சட்டை, புத்தகப் பை ஆகியவற்றை வழங்கியதோடு வசதி குறைந்த 6 மாணவர்களுக்கு உதவித் தொகையாகத் தலா 100 வெள்ளியும் வழங்கினோம் என்று ஆலயத்தின் சேவைகளைப் பட்டியலிட்டார் சந்திரசேகரன்.

இது தினசரி 500 உணவு பொட்டலங்களைத் தயார் செய்து விநியோகித்துத் தவிர, கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தாமான் செந்தோசா, அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் மற்றும் தாமான் ஸ்ரீ மூடா மக்களுக்கும் உதவிக் கரம் நீட்டியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெள்ளம் சூழ்ந்த ஒரு அந்த ஒரு வாரக் காலத்தின் போது தாமான் செந்தோசா மற்றும் தாமான் ஸ்ரீ மூடாப் பகுதி பாதிக்கப் பட்டவர்களுக்காகத் தினசரி 500 உணவு பொட்டலங்களைத் தயார் செய்து விநியோ கித்து வந்தோம். மேலும், வெள்ளத்தில் உடைமைகளை இழந்தவர்களுக்கு உதவும் வகையில் ரைஸ் குக்கர், மின்சாரக் கேத்தல், மெத்தை, தலையணை மற்றும் சமையல் பொருள்கள் ஆலயத்தின் சார்பாக விநியோகிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

## மண்டபம் கட்டும் திட்டம்

ஆலயத்தின் சமய மற்றும் சமூக நிகழ்வுகள் குறித்து விளக்கிய அவர், ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலய வளாகத்தில் சிலம்பம், பரத நாட்டியம், தேவாரம், தேக்குவண்டோ, யோகா மற்றும் தியான வகுப்புகள் நடத்தப்படுவதாகக் கூறினார்.

அதோடு மட்டுமின்றி, எஸ்.பி.எம்., பி.எம். ஆர். யு.பி.எஸ்.ஆர். தேர்வுகளை எழுதும் மாணவர்களுக்குத் தேர்வு வழிகாட்டி வகுப்புகளையும் தன்முனைப்பு பயிற்சிகளையும் ஆலயம் நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பணிகள் யாவும் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் அவர்களின் ஆதரவோடு நடத்தப்பட்டன. அவர் வழங்கி வரும் அபரிமித ஆதரவு காரணமாக இவ்வாலயம் சிறப்பான முறையில் செயல்படுவதற்கும் சமயப் பணிகளோடு சமுதாயப் பணிகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சந்திரசேகரன் தெரிவித்தார்.

எதிர்காலத் திட்டம் குறித்துக் கேட்கப்பட்ட போது, இவ்வட்டார மக்களின் வசதிக்காக மண்டபம் கட்டும் திட்டத்தை நாங்கள் கொண்டிருக்கிறோம். இந்நோக்கத்திற்காக ஆலயத்தின் பின்புறம் காலியாக உள்ள அரை ஏக்கர் நிலத்தைப் பெறுவதற்கு அரசாங்கத்திடம் தொடர்ந்து போராடி வருகிறோம் என்று அவர் கூறினார்.



## வேளாண் துறையிலும்

# வெற்றிக் கனியை எட்டிப் பறிக்கலாம்

## -சரவணன்

உலகில் செல்வத்தை ஈட்டுவதற்கு எத்தனையோ தொழில்கள் உண்டு. ஆனால், உயிர் வாழ்வதற்கு அவசியமான உணவைத் தேடுவதற்கு இருக்கும் ஒரே தொழில் விவசாயம்தான். மனுக்குலத்திற்கு அடிப்படை வாழ்வாதாரமாக விளங்கும் விவசாயம்தான் பெரும்பான்மையினரால் புறக்கணிக்கப்படும் துறையாகவும் இருக்கிறது. கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம், சகதியில் கால்பதிக்க வேண்டிய நிர்பந்தம், சமூகத்தின் எதிர்மறையான பார்வையினால் ஏற்படும் சங்கடம் ஆகியவை விவசாயத்தை பலரிடமிருந்து அந்நியப் படுத்தி விட்டன.

இங்கு பலர் கனிகளைப் பறிப்பதில் காட்டும் ஆர்வத்தை விதைப்பதில் காட்டுவதில்லை. விதைப்பதால் வாழ்வு நிச்சயம் சிறக்கும் என்ற நம்பிக்கையை நம்மில் விதைக்கும் வெகு சிலரில் ஒருவராக விளங்குகிறார் ஷா ஆலமைச் சேர்ந்த எஸ்.பி.சரவணன்.

ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினர், பி.கே.ஆர். கட்சிப் பொறுப்பாளர், சமூக சேவையாளர், வேளாண் தொழில் முனைவோர் என பன்முகங்களைக் கொண்ட சரவணன் விவசாயத்தை வருமானம் ஈட்டும் தொழிலாக மட்டுன்றி சமூகத் தொண்டாகவும் செய்து வருகிறார்.

### சமுதாயத்திற்கு வழிகாட்ட கையில் எடுத்த தொழில்

பாரம்பரிய முறை தவிர்த்து நவீன விவசாய முறையை அடிப்படையாகக் கொண்ட உரப்பாசனம் ஜ் என்பது தாவரங்களுக்குப பாசன நீருடன் உரம் மற்றும் மண்பதப்படுத்தி விளைவிப்பது) மற்றும் ஹைட்ரோபோனிக் எனப்படும் நீரியல் முறையிலும் இவர் காய்கறிகளை பயிரிட்டு வருகிறார்.

கிள்ளான், ஜோஹான் செத்தியா பகுதியில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் கீரை வகைள் பயிரீடு ஒரு புறம், ஷா ஆலம் வட்டாரத்தில் சுமார் 15 இடங்களில் சமூக வேளாண் திட்டத்தின் வழி நவீன விவசாயம் மறுபுறம் என தேனீ போல் சுறுசுறுப்பாக இயங்கி வரும் எஸ்.பி. சரவணன் தனது விவசாய அனுபவங்களை சிலாங்கூர் இன்று பத்திரிகையிடம் பகிர்ந்து கொண்டார்.

பெரும்பாலான இளைஞர்களைப் போலவே எனக்கும் விவசாயம் அந்நியமான தொழிலாகத்தான் இருந்து வந்தது. முன்னாள் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினரான செனட்டர் யாக்கோப் சபாரி அளித்த ஊக்குவிப்பின் வாயிலாக வேளாண் துறையில் தடம் பதிக்கும் தைரியம் எனக்கு வந்தது.

தனியார் துறையிலும் சொந்த முயற்சியிலும் விவசாயத்தின் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டப் பிறகு சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கிள்ளான் ஜோஹான் செத்தியா பகுதியில் ஐந்து ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து காய்கறிகளைப் பயிரிட ஆரம்பித்தேன்.

நானும் எனது நான்கு பணியாளர்களும் தினசரி பத்து மணி நேரம் வீதம் மாதம் 30 நாளும் உழைப்பை கொட்டினோம். அதன் பலன் சில மாதங்களில் எங்களுக்கு கிட்டியது.

### 5 ஏக்கருக்கு 5 ஆயிரம் முடியும்

இத்தோட்டத்தில் கத்திரி, வெண்டை, புடலங்காய், பீர்க்கங்காய் போன்ற காய்கறிகளையும் மற்றும் கடுகுக்கீரை, தண்டுக்கீரை, பொன்னாங்கன்னி கீரை, கங்கோங் உள்ளிட்ட கீரை வகைகளையும் பயிரிடுகிறோம். இங்கு தினசரி உற்பத்தியாகும் 300 முதல் 400 கிலோ காய்கறிகளை செலாயாங் மற்றும் மேரு மொத்த விற்பனை சந்தைக்கு அனுப்புகிறோம்.





இங்கு மேற்கொள்ளப்படும் காய்கறி பயிரீட்டின் மூலம் எல்லா செலவுகளும் போக மாதம் 5,000 வெள்ளி வரை வருமானம் ஈட்ட முடிகிறது. இது தவிர, சமூக உணர்வின் அடிப்படையில் ஷா ஆலம் வட்டாரத்தின் 15 இடங்களில் நவீன உரப்பாசன முறையில் காய்கறிகளை பயிரிட்டு வருகிறோம். ஒவ்வொரு இடத்திலும் 300 முதல் 500 பைகளில் கத்திரி, வெண்டை, மிளகாய், வெள்ளரி போன்ற காய்கறிகளை பயிர் செய்துள்ளோம்.

நகர்ப்புறங்களில் இடப்பற்றாக்குறை நிலவுவதால் இந்த நவீன விவசாய முறை இங்கு பொருத்தமானதாக உள்ளது. தனிநபர்கள் மட்டுமின்றி குடியிருப்பாளர் சங்கம் ருக்குன் தெத்தாங்கா போன்ற சமூக அமைப்புகளும் இந்த விவசாயத் திட்டத்தில் பங்கேற்று வருகின்றன. இதன் மூலம் பயனற்றுக் கிடக்கும் நிலங்கள் பண்படுத்தப்படுவதோடு சம்பந்தப்பட்ட அமைப்புகள் உற்பத்தி பொருள்களை விற்பதன் மூலம் வருமானத்தை ஈட்டி மக்கள் சமூகப் பணிகளை மேற்கொள்ள முடிகிறது சரவணன் குறிப்பிட்டார்.

இந்த நவீன விவசாயத்தின் மூலம் கிடைக்கும் காய்கறிகளை ஒரே இடத்தில் குவித்து வட்டார மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம். விற்றது போக மிஞ்சியிருக்கும் காய்கறிகளை மொத்த விற்பனை சந்தைக்கு அனுப்புகிறோம் என்று அவர் கூறினார்.

### நம் இளைஞர்களுக்கு வழிகாட்டி

இது போக, இந்திய இளைஞர்களுக்கு விவசாயம் மீதான ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்தையும் தாம் அமல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் வேளாண் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு உரப்பாசன விவசாயம் குறித்த நுணுக்கங்களை தொழில் ரீதியாக கற்றுக் கொடுப்பதோடு விவசாயம் செய்வதற்குரிய அடிப்படை வசதிகளையும் செய்து தருகிறோம். எங்களிடம் பயிற்சி பெற்ற ஐந்து இளைஞர்கள் தற்போது விவசாயத்தை முழு நேரத் தொழிலாக விரிவான அளவில் மேற்கொண்டு வருகின்றனர் என்றார் அவர்..

தனது விவசாயத் முறையின்பால் ஈர்க்கப்பட்ட சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழக (பி.கே.பி.எஸ்.) அதிகாரிகள் உற்பத்தி பொருள்களை வாங்குவது தொடர்பில் விவாதிப்பதற்காக தம்மை அணுகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினராக உள்ள காரணத்தால் எனது அதிகாரத்திற்குட்பட்ட செக்சன் 16 மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள காலி நிலங்களில் விவசாயத் திட்டத்தை அமல்படுத்தி வட்டார மக்கள் வருமானம் ஈட்டுவதற்குரிய வாய்ப்பினை ஏற்படும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக செக்சன் 16 பகுதியில் மீன்வளர்ப்பு, அன்னாசி மற்றும் காளான் பயிரீட்டுத் திட்டத்தை அமல்படுத்துவதற்கான முயற்சியில் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன் என்று சரவணன் சொன்னார். எந்த தொழிலாக இருந்தாலும் சரி, கௌரவம் பார்க்காமலும் நேரம் காலம் பார்க்காமலும் உழைக்கத் தயாராக இருந்தால் வெற்றிக் கனியை நிச்சயம் பறிக்கலாம் என்பது இவரின் தாரக மந்திரமாக உள்ளது.



# பள்ளிகளுக்கு சிலாங்கூர் அரசின் மானியம்

சிலாங்கூர் அரசின் மானியத்திற்கு விண்ணப்பம் செய்யத் தமிழ் சீன, முபாலிக் மற்றும் மக்கள் சமயப் பள்ளிகளுக்கு வரும் மார்ச் 31 ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதம் முதல் தொடங்கி இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். பள்ளிகளில் சீரமைப்புப் பணிகளைத் தொடர்பில் நிதிக் கோரிக்கையை முன்வைக்கப் பள்ளிகளுக்கு இன்னும் கால அவகாசம் உள்ளது. விண்ணப்பத் தேதி முடிவுக்கு வந்தவுடன் மானியம் பெறுவதற்குத் தகுதியுள்ள பள்ளிகள் இறுதி செய்யப்படும் என்று அவர் சொன்னார்.

கடந்த பெருந்தொற்று காலத்தில் இந்த மானியம் ஒரு முறை மட்டுமே வழங்கப்பட்டது. இம்முறை குறைந்த பட்சம் இரு முறை அல்லது கூடின பட்சம் மூன்று முறை வழங்கப்படும் என்றார் அவர்.

சிலாங்கூரிலுள்ள பள்ளிகளைத் தரம் உயர்த்துவது மற்றும் சீரமைப்பது போன்ற பணிகளுக்காக மாநில அரசு ஆண்டு தோறும் 2 கோடியே 60 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்து வருவதாக அமிருடின் சொன்னார்.

சிலாங்கூரிலுள்ள 637 பள்ளிகளை சீரமைப்பதற்காக 2 கோடியே 40 லட்சம் வெள்ளியை மந்திரி புசார் கடந்தாண்டு டிசம்பர் மாதம் வழங்கினார். அந்நிதியில் 93 லட்சம் வெள்ளியைச் சமயப் பள்ளிகளும் 90 லட்சம் வெள்ளியைச் சீனப் பள்ளிகளும் 45 லட்சம் வெள்ளியைத் தமிழ்ப்பள்ளிகளும் பெற்றன.

# சிலாங்கூர் அரசின் உதவியால் பயன் பெறும்
# புக்கிட் ரோத்தான் பாரு தமிழ்ப்பள்ளி

கோலச் சிலாங்கூர்–

கோலாலம்பூர் நெடுஞ்சாலையில் புக்கிட்ரோத்தான் பட்டணத்திற்கு அருகில் அமைந்துள்ளது புக்கிட் ரோத்தான் பாரு தமிழ்ப்பள்ளி. சுமார் எண்பது ஆண்டுகள் பழைமை வாய்ந்த இப்பள்ளி தனக்கென நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்த எண்பது ஆண்டு காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களின் அறிவுக்கண்களைத் திறந்த இப்பள்ளி கால மாற்றத்தாலும் நவீனமயத்தாலும் ஏற்பட்ட சறுகல்களால் துவண்டு விடாமல் அதிலிருந்து மீண்டு வரத் தொடர்ந்து போராடி வருகிறது.

புக்கிட் ரோத்தான் பள்ளியின் வரலாறு, கல்வி நடவடிக்கைகள் பள்ளியைத் தொடர்ந்து காப்பாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்து விவரிக்கிறார் பள்ளியின் தலைமையாசிரிய ஆர்.ராஜேந்திரன்.

### ● பள்ளியின் வரலாறு

இப்பள்ளி கடந்த 1939 ஆம் ஆண்டில் ராஜகிரி தோட்டத்தில் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் பலகையும் தகரத்திலான கூரையும் கொண்ட கொட்டகையில் இப்பள்ளி செயல்பட்டது. ஐம்பது மாணவர்களுடன் தொடங்கிய இப்பள்ளியில் எழுபதாம் ஆண்டு களின் தொடக்கத்தில் மாணவர்கள் எண்ணிக்கை 234 ஆக உயர்வு கண்டது. இதுவே அப்பள்ளி யின் பொற்காலமாகவும் இருந்தது.

காலவோட்டத்தில் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாணவர்கள் எண்ணிக்கை படிப்படியாகச் சரிவு கண்டு கடந்த 2012 ஆம் ஆண்டில் 20 மாணவர்கள் மட்டுமே பயிலக்கூடிய வருத்தமான சூழல் ஏற்பட்டது.

இதற்கிடையே, பள்ளி நிர்வாகமும் தோட்ட நிர்வாகமும் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகக் கோலச் சிலாங்கூர்– கோலாலம்பூர் நெடுஞ்சாலை அருகில் புக்கிட் ரோத்தான் பட்டணத்தையொட்டி 2.8 ஏக்கர் நிலப்பரப்பில் ஆறு வகுப்பறைகளுடன் புதிய பள்ளி கட்டப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் கணினி அறையும் நூலகமும் அமைக்கப்பட்ட வேளையில் 2019 இல் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப அறையும் கூடுதலாக இணைக்கப்பட்டது எனப் பள்ளியின் வரலாற்றை விவரித்தார் தலைமையாசிரியர் ராஜேந்திரன்.

### ● அடைவு நிலை

தற்போது இப்பள்ளியில் 40 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் உள்ளதாகக் கூறிய அவர், 2018/2019 யு.பி.எஸ்.ஆர். தேர்வில் இப்பள்ளி 100 விழுக்காட்டு தேர்ச்சியையும் 2017/2018 யு.பி.எஸ்.ஆர். தேர்வில் ஒரு மாணவர் 8ஏ பெற்றதாகச் சொன்னார். இது தவிர 2020/2021 இல் இப்பள்ளி மாணவர்கள் 48 விழுக்காட்டு அடைவு நிலை மதிப்பீட்டைப் பெற்றனர் என்றார்.

புறப்பாட நடவடிக்கைகளைப் பொறுத்த வரை கடந்தாண்டு இயங்கலை வாயிலாக நடத்தப்பட்ட குறுக்கோட்ட போட்டியில் இப்பள்ளி 3 ஆம் இடத்தைப் பெற்றது. இது தவிர, ஓம்ஸ் நாடகப் போட்டியில் இரு முறை நான்காம் இடத்தைப் பிடித்தது. மாநில அளவிலான மொழிப் போட்டியில் முழு அளவில் பங்கேற்றதுடன் 2019/2020 கட்டுரை, கவிதைப் போட்டிகளில் இரண்டாம் பரிசைப் பெற்றது.2019 ஆம் ஆண்டு நடைபெற்ற மலாய் புதிர்ப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

2019/2021 ஆம் ஆண்டு எஸ்.கே.எம். பள்ளிப் பிரிவில் மாநில அளவில் சிறந்த கருவள மையத்திற்கான முதல் பரிசையும் மாநில அளவில் கடந்த 2019 இல் நான்காம் நிலையையும் கடந்தாண்டு இரண்டாம் நிலையையும் பெற்றது என்றார் அவர்.







### ● தமிழ்ப்பள்ளிகளின் சவால்கள்

மாணவர்கள் எண்ணிக்கை வீழ்ச்சிதான் இப்பள்ளி எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாக உள்ளதாக ராஜேந்திரன் குறிப்பிட்டார். பள்ளியின் சுற்று வட்டாரத்தில் குடியிருப்புகள் இல்லாத நிலையில் அருகிலுள்ள தாமான் ராஜாவளி, தாமான காசாவரி, மன்மவுத் தோட்டம், ஈஜோக் பட்டணம், புக்கிட பாடோங் கிராமம் மற்றும் கோத்தா புத்ரி ஆகிய பகுதிகளிலிருந்துதான் மாணவர்கள் இப்பள்ளிக்கு வருகின்றனர்.

கோலாலம்பூர்–கோல சிலாங்கூர் நெடுஞ்சாலை நான்கு தடங்கள் கொண்ட இருவழி நெடுஞ்சாலையாக விரிவுபடுத்தப்பட்ட பின்னர் இப்பள்ளிக்கு வர வேண்டுமானால் சுமார் ஐந்து கிலோமீட்டர் வரை சென்று திரும்ப வேண்டியுள்ளது.

இதனால் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அருகிலுள்ள வேறு தமிழ்ப்பள்ளிகளுக்கும் தேசியப் பள்ளிகளுக்கும் அனுப்புகின்றனர். பள்ளி நிர்வாகம் பெற்றோர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து தொடர்ந்து மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் மாணவர்கள் எண்ணிக்கையை 40 ஆக உயர்த்தியுள்ளோம். இந்த எண்ணிக்கையை 50 ஆக உயர்த்தும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறோம்.

அந்த முயற்சியின் ஒரு பகுதியாகக் கடந்தாண்டு இறுதியில் பெற்றோர் ஆசிரியர் சங்க முயற்சியில் மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக வேன் ஒன்று வாங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொலைவிலுள்ள மாணவர்கள் பள்ளிக்கு வருவதில் எதிர்நோக்கும் சிரமம் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

### ● மாநில அரசின் உதவி

இப்பள்ளியில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதிலும் மாணவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதிலும் மாநில அரசு அளப்பரிய பங்களிப்பை வழங்கி வருகிறது என்று ராஜேந்திரன் தெரிவித்தார்.

மாநில அரசிடமிருந்து கடந்தாண்டில் 40,000 வெள்ளியும் அதற்கு முந்தைய ஆண்டில் 35,000 வெள்ளியும் மானியம் கிடைத்தது. பெற்றோர் ஆசிரியர் சங்கம் பள்ளி வேன் வாங்கியது, பொது முடக்கக் காலத்தில் மாணவர்களுக்குச் சீருடை மற்றும் பள்ளி உபகரணங்கள் வாங்கத் தலா 150 வெள்ளியை வழங்கியது உள்படப் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது, இது தவிர, பள்ளியில் வேலி அமைக்கும் பணிக்காக மத்திய அரசு 35,000 வெள்ளியை ஒதுக்கியுள்ளது என அவர் சொன்னார்..

### ● பெ.ஆ. சங்கத்தின் பங்களிப்பு

பள்ளியில் மாணவர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து பிரச்னையைக் களையப் பேருந்து வசதியைத் தாங்கள் சொந்தமாக ஏற்பாடு செய்துள்ளதாகப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ரெ.முரசொலி மாறன் கூறினார்.

இது தவிர கடந்த மூன்று ஆண்டுகளாக மாணவர்களுக்கு இலவச பயிற்சி புத்தகங்களை வழங்கி வருவதோடு கூட்ட அறை, அறிவியல் கூடம், சிற்றுண்டிச் சாலை, ஆகியவற்றின் விரிவாக்கத்திற்கும் பங்களிப்பை வழங்கியுள்ளது. மாணவர்கள் இப்பள்ளியில் சேர்வதை ஊக்குவிக்கும் நோக்கில் முதலாம் ஆண்டு சேரும் மாணவர்களுக்கு மிதிவண்டிகளை நாங்கள் அன்பளிப்பாக வழங்குகிறோம் என்றார் அவர்.

நாங்கள் இந்தப் பணிகளை மேற்கொள்ள மாநில அரசின் நிதியுதவி பெரும் துணையாக உள்ளது. ஆண்டு தோறும் இப்பள்ளிக்கு நிதியுதவி வழங்கி மாணவர்களின் மேம்பாட்டிற்கு அளப்பரிய பங்கினை ஆற்றி வரும் மாநில அரசுக்கும் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி மற்றும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் கணபதிராவ் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# குறைந்தபட்ச ஊதியத்தை அமல்படுத்துவது விரைவில் அறிவிக்கப்படும்

புத்ராஜெயா:–

குறைந்தபட்ச ஊதியம் வெ.1,500 என்ற விரிவான வழிமுறை மற்றும் அமலாக்கம் விரைவில் அறிவிக்கப்படும் என்று மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் தெரிவித்தார்.

பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் நேற்று வெளியிட்ட அறிவிப்பை இந்த நடவடிக்கை சாதகமான பங்களிப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ''என்று அவர் இன்று ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நேற்று, இஸ்மாயில் சப்ரி அரசாங்கம் குறைந்தபட்ச ஊதியத்தை மாதத்திற்கு வெ.1,500 ஆக உயர்த்தியுள்ளதாகவும், மேலும் இது மே 1 முதல் நாடு முழுவதும் சில நிறுவனங்களுக்கு செயல்படுத்தப்படும் என அறிவித்தார்.



வரவேற்ற சரவணன், மார்ச் 11ஆம் தேதியன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறினார்.

''ஊதியங்கள் மற்றும் தொழிலாளர்களின் நல்வாழ்வை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுடன் இது தெளிவாக ஒத்துப்போகிறது. தொழிலாளர்களின் வாங்கும் திறன் அதிகரிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைத் தூண்டுவதற்கு

புதிய குறைந்தபட்ச ஊதியம் ஆரம்பத்தில் பெரிய நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு (ஜிஎல்சி) பொருந்தும் என்று பிரதமர் கூறினார்.

குறைந்தபட்ச ஊதியம் கடைசியாக பிப்ரவரி 1, 2020 அன்று மறுஆய்வு செய்யப்பட்டு, பட்ஜெட் 2020 தாக்கல் செய்யும் போது வெ.1,100 இலிருந்து வெ.1, 200 ஆக வெ.100 உயர்த்தப்பட்டது.

# கட்சித் தாவல் எதிர்ப்பு மசோதா

## ஏப்ரல் 11 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல்

கோலாலம்பூர் :–

கட்சித் தாவலுக்கு எதிரான மசோதா ஏப்ரல் 11 ஆம் தேதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று பிரதமர் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் வான் ஜுனைடி துவாங்கு ஜாபர் தெரிவித்தார்.

தேதியை நிர்ணயிப்பது தொடர்பாக பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப்புடன் தாம் விவாதித்துள்ளதாக அவர் சொன்னார்.

பிரதமருடன் விவாதிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது, கட்சித் தாவல் மசோதாவை விவாதிப்பதற்காக ஏப்ரல் 11 ஆம் தேதியன்று




நாடாளுமன்றக் சிறப்புக் கூட்டத்தை நடத்த ஒப்புக்கொண்டோம் என அவர் கூறினார்.மக்களவையில் வான் ஜுனைடி உரையாற்றிக் கொண்டிருந்த போது பாகான் தொகுதி ஹராப்பான் உறுப்பினர் லிம் குவான் எங் குறுக்கிட்டு, நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தொடர் எப்போது நடைபெறும் என்று கேட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

ஏற்கனவே நோன்பு மாதத்தில் நாடாளுமன்றக் கூட்டம் நடைபெற்றுள்ளதால் நோன்பு சமயத்தில் நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வு நடைபெறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அவர் கூறினார்.

''மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்த மசோதாவை நாங்கள் தாக்கல் செய்வோம் என்று பிரதமர் உறுதியளித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதி முடிவை எடுக்கட்டும் என்றார் அவர்.

உருமாற்றம் மற்றும் அரசியல் நிலைத்தன்மை தொடர்பில் பக்கத்தான் ஹராப்பான் கூட்டணியுடன் கடந்தாண்டு செப்டம்பர் 13 ஆம் தேதி அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதால் பிரதமரின் வேண்டுகோளின் படி இந்த சட்ட மசோதா தாக்கல் விரைவுபடுத்தப்படுகிறது.

# ஊழியர் சேம நிதியிலிருந்து வெ.10,000 மீட்க அரசாங்கம் அனுமதி



புத்ரா ஜெயா :–

கோவிட்–19 பெருந்தொற்று பாதிப்பிலிருந்து இன்னும் மீளாமலிருக்கும் மலேசியக் குடும்பத்தின் சுமையைக் குறைக்கும் விதமாக ஊழியர் சேம நிதி வாரியத்திலிருந்து (இ.பி.எஃப்.) 10,000 வெள்ளி சிறப்பு நிதி மீட்புக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

வயது முதிர்ந்த காலத்தில் பயன்படக்கூடிய இந்தத் தொகையை மீட்பதற்கு அனுமதிக்கும் முடிவை எடுப்பதில் அரசாங்கம் சங்கடத்தை எதிர்நோக்கியதாகப் பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கூறினார்.

எனினும், நடப்புத் தேவை மற்றும் எதிர்காலச் சேமிப்பு ஆகிய இரு அம்சங்களுக்குச் சமவிகிதத்தில் தீர்வு காணும் இடைக்கால வழியாக இம்முடிவு எடுக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

பெருந்தொற்றுக்கு பிந்தைய மீட்சிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வில் மலேசியக் குடும்பத்தில் பலர் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டும் வேலை இழந்தும் இருப்பது கண்டறியப்பட்டது என்று அவர் சொன்னார்.

ஊழியர் சேம நிதியிலிருந்து பணத்தை மீட்பது தொடர்பில் அரசாங்கம் பல்வேறு தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்து, ஆய்வு மேற்கொண்டு இறுதி முடிவை எடுத்தது என்றார் அவர்.

எனினும், தங்களுக்கு அவசரத் தேவை இருந்தால் தவிரச் சேமிப்பிலிருந்து பணத்தை எடுப்பதைத் தவிர்க்கும்படி இ.பி.எஃப். சந்தாதாரர்களைப் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

பணத்தை மீட்கும் விஷயத்தில் தங்களின் எதிர்காலம் கருதிச் சரியான முடிவை அவர்கள் எடுப்பார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சமையல் எண்ணெய்க்கு இரு வேறு விலை நிர்ணயம்

## – அமைச்சு பரிசீலனை

கோலாலம்பூர்:–

உள்நாட்டு பயனீடு மற்றும் ஏற்றுமதி என இருவேறு விலைகளைச் சமையல் எண்ணெய்க்கு நிர்ணயிப்பது குறித்து உள்நாட்டு வாணிக மற்றும் பயனீட்டாளர் விவகார அமைச்சு பரிசீலித்து வருகிறது.

உதவித் தொகை வழங்கப்பட்ட சமையல் எண்ணெய் சரியான தரப்பினருக்குச் சென்று சேர்வதை உறுதி செய்யும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அதன் அமைச்சர் டத்தோஸ்ரீ அலெக் சாண்டர் நந்தா லிங்கி கூறினார்.

நடப்பு முறைக்கு மாற்றாக வேறு வழிகளை ஆராய்ந்து வருகிறோம். சமையல் எண்ணெய் விலையை நடப்பு முறைக்கு மாற்றாக இரு விதமாக அதாவது ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு தேவைக்கு ஏற்ப நிர்ணயிப்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம் என்று அவர் சொன்னார்.

மக்களவையில் நேற்று மாமன்னரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தை முடித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சமையல் எண்ணெய் விநியோகத்தில் இடையூறு ஏற்படாமலிருப்பதை உறுதி செய்வதற்காக அரசாங்கம் அந்த உணவுப் பொருளுக்கான உதவித் தொகையை 190 கோடி வெள்ளியாக அதிகரித் துள்ளதாக அவர் சொன்னார்.

உதவித் தொகை வழங்கப்பட்ட சமையல் எண்ணெயை வாங்குவதற்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்துக் கருத்துரைத்த அவர், தகுதி உள்ள தரப்பினர் மட்டுமே இந்தச் சலுகையைப் பெறுவதை உறுதி செய்ய இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

# வெ.500,000 நிதி ஒதுக்கியுள்ளது

## எம்பிஜ விளையாட்டு நடவடிக்கைகளுக்கு



சேர்டாங் :–

சிலாங்கூர் மந்திரி புசார் கார்ப்ரேசன் அல்லது எம்பிஐத் தனது பெருநிறுவனச் சமூகப் பொறுப்புத் திட்டத்தின் மூலம் பல்வேறு விளையாட்டு நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க வெ. 500,000 ஒதுக்கீடு செய்துள்ளது.மாநிலத்தின் பல விளையாட்டு சங்கங்களுக்கு இதுவரை வெ.50,000 விநியோகிக்கப்பட்டுள்ளதாக அதன் நிறுவனச் சமூகப் பொறுப்புத் தலைவர் கூறினார். "இந்த ஒதுக்கீடு சமூகம், கிராமம் மற்றும் வீட்டு மட்டங்களில் திட்டங்கள் அல்லது விளையாட்டு தொடர்பான செயல்பாடுகளுக்கு நிதியுதவி உள்ளது.

"அதுமட்டுமல்லாமல், சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பதற்கான ஸ்பான்சர்ஷிப்பையும் நாங்கள் கவனத்தில் கொள்கிறோம் மற்றும் உதவத் தயாராக இருக்கிறோம்,"என்று அகமது அஸ்ரி ஜைனல் நோர் கூறினார்.

இன்று பிற்பகல் இங்குள்ள யுனிவர்சிட்டி புத்ரா மலேசியா (யுபிஎம்) ரக்பி மைதானத்தில் சிலாங்கூர் ரக்பி யூனியனின் தலைவர் சையத் ஆல்ட்ரின் சையத் அகமது கபீரிடம் ரிம15,000 நன்கொடையாக வழங்கிய பின்னர் அவர் இவ்வாறு கூறினார். நன்கொடைகள் மற்றும் ஸ்பான்சர்ஷிப்கள் தேவைப் படுபவர்கள் தாங்கள் நடத்த விரும்பும் நிகழ்ச்சித் தாள்களை உடன் எடுத்துக் கொண்டு எம்பிஐச் சந்திக்கலாம் என்று அகமது அஸ்ரி கூறினார். "எந்த ஒரு பேட்டி விளையாட்டாக இருந்தாலும் அனைத்து விண்ணப்பங்களையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். "அமெச்சூர் அல்லது 'ஜூனியர்' திட்டம் எதுவாக இருந்தாலும், அனைத்து விண்ணப்பங்களையும் நாங்கள் ஆய்வு செய்வோம்," என்று அவர் கூறினார்.

# தேசிய விளையாட்டாளர் விருதளிப்பு

## பாராஒலிம்பிக் பிரிவில் எஸ். சுரேஷ் தேர்வு



அஜிசுல்ஹஸ்னி



எஸ்.சுரேஷ்

கோலாலம்பூர் :–

நேற்று 2019/2020 ஆண்டிற்கான தேசிய நிலையிலான சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனை மற்றும் பாராஒலிம்பிக் வீரருக்கான விருதளிப்பு இங்குள்ள தலையாய தங்கும் விடுதியில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் உள்ளரங்கு சைக்கிளோட்ட வீரர் டத்தோ முகமது அஜிசுல்ஹஸ்னி சிறந்த விளையாட்டு வீரராகவும் வூஷூ விளையாட்டாளர் டான் சியோங் மின் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளையில் பாராஒலிம்பிக் பிரிவில் எஸ்.சுரேஷ் சிறந்த விளையாட்டாளராக அறிவிக்கப்பட்டார். 2019 ஆம் ஆண்டு அனைத் துலக பொது அம்பு எறிதல் போட்டியில் வெற்றியாளராக வாகை சூடியதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

இந்த மூன்று வெற்றியாளர்களுக்கும் தலா 20,000 வெள்ளி ரொக்கப் பரிசும் வெற்றிக் கோப்பையும் வழங்கப்பட்டது. இந்த சிறப்புமிக்க நிகழ்வுக்கு மாட்சிமை தங்கிய பேரரசர் அல்–சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல்–முஸ்தாபா பில்லா ஷா தலைமை தாங்கினார். பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப், இளைஞர், விளையாட்டுத் துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ அகமது பைசால் அஸூமு மற்றும் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நமது கவுன்சிலர் கே. ஜெகதீஸ்வரன்

## (சபாக் பெர்ணம் மாவட்ட மன்றம்)



சிலாங்கூர் மாநிலத்தின் வடகோடியில், பேராக் மாநில எல்லையில் அமைந்துள்ள நகரம் சபாக் பெர்ணம். இப்பகுதிக்கான ஊராட்சி மன்றமாக விளங்கும் சபாக் பெர்ணம் மாவட்ட மன்றத்தின் உறுப்பினராக இருக்கும் இளைஞரான கே. ஜெகதீஸ்வரன் இம்மாதத்திற்கான நமது கவுன்சிலர் பகுதியில் வலம் வருகிறார்.

கடந்தாண்டு முதல் மாவட்ட மன்ற உறுப்பினராக இருந்து வரும் இவர், சுங்கை பெசார் கெஅடிலான் இளைஞர் பகுதியின் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். சபாக் பெர்ணம் வட்டாரம் குறித்தும் அப்பகுதி மக்களுக்கு ஆற்றி வரும் சேவைகள் குறித்து ஜெகதீசன் நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

அதிக பரபரப்பு இல்லாத பகுதியாக விளங்கி வரும் சபாக் பெர்ணம் வட்டாரத்தில் குறைந்த எண்ணிக்கையிலான இந்தியர்களே வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் சொந்த தொழிலிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்து வருகின்றனர்.

இவர்களுக்கு கவுன்சிலர் என்ற முறையிலும் கெடிலான் கட்சி சார்பிலும் இயன்ற உதவிகளை வழங்கி வருகிறேன். ஐ–சீட் எனப்படும் சிலாங்கூர் இந்திய சமூக தொழில் முனைவோர் மேம்பாட்டு இலாகா மூலம் கடந்தாண்டு 10 பேர் வர்த்தக உபகரணங்கள் பெறுவதற்கு உதவியுள்ளோம். இவ்வாண்டில் அத்திட்டத்தின் வழி மேலும் 7 பேருக்கு உதவி பெற விண்ணப்பித்துள்ளோம்.

இது தவிர, சிலாங்கூர் அரசின் ஐ.பி.ஆர். எனப்படும் மக்கள் நலத் திட்டங்கள் உரிய தரப்பினருக்கு கிடைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். இளைஞர்கள் உயர்கல்வி பெறுவதற்கு மேற்கொண்டு வரும் முயற்சியின் பலனாக இரு மாணவர்கள் யுனிசெல் பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ளனர் என்று ஜெகதீஸ்வரன் குறிப்பிட்டார்.

கடந்தாண்டு தீபாவளியின் போது தனது சொந்த ஏற்பாட்டில் 50 பேருக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் ஏற்பாட்டில் 150 பேருக்கும் பலகாரங்கள் தயாரிப்பதற்கான பொருள்கள் விநியோகிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கோவிட்–19 நோய்த் தொற்று பரவல் காரணமாக பாதிக்கப் பட்ட மற்றும் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட சுமார் 50 குடும்பங்களுக்கு உணவுப் பொட்டலங்களை தாங்கள் விநியோகித்ததாக அவர் சொன்னார்.

கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின் போது தாமான் ஸ்ரீ மூடா பகுதியில் இரு படகுகள் மற்றும் 15 பேர் கொண்ட குழுவினருடன் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டோம். அதோடு மட்டுமின்றி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 25 வீடுகளை சுத்தம் செய்யும் பணியையும் மேற்கொண்டோம் என அவர் கூறினார்.

# இதுவரை 14,000 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்தது



கோலா லங்காட்:
ஆசிரியர் பற்றாக்குறையைச் சமாளிக்கக் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறப்பு ஆட்சேர்ப்பு மூலம் இதுவரை 14,000 ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்று மூத்த கல்வி அமைச்சர் டத்தோ ராட்ஸி ஜிடின் தெரிவித்தார்.

சிறப்பு ஆட்சேர்ப்புக்காக ஒதுக்கப்பட்ட 18,702 மொத்த ஆசிரியர்களின் அடிப்படையில், தற்போது 4,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்களைப் பணியமர்த்தும் பணி நடைபெற்று வருவதாக அவர் கூறினார். “இந்தப் புதிய ஆட்சேர்ப்பின் மூலம், இடமாறுதல் விண்ணப்பம் அதிகமாக உள்ள பகுதிகளில் புதிய ஆசிரியர்களைக் கொண்டு வருவதற்கு முன், நீண்டகாலமாகப் பணியாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றத்திற்கு முன்னுரிமை அளிப்போம்” என்று எஸ்எம்கே பண்டார் சௌஜனா புத்ராவில் இன்று முன்னதாக நடைபெற்ற ஒப்படைப்பு விழாவில் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

புதிய ஆசிரியர்கள் சேர்ப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இடமாற்ற விண்ணப்பங்கள் வரலாற்றில் இதுவரை அங்கீகரிக்கப் பட்டவற்றில் அதிகபட்சமாக 55 சதவீதத்திற்கும் அதிகமாக இருப்பதாக ராட்ஸி கூறினார்.

# பக்கத்தான் ஹராப்பான் மாநிலங்களில் இவ்வாண்டு சட்டமன்றம் கலைக்கப்படாது

ஷா ஆலம்:–
பகாகத்தான் ஹராப்பான் வசமுள்ள சிலாங்கூர் உள்ளிட்ட மூன்று மாநிலங்களில் இவ்வாண்டு சட்டமன்றம் கலைக்கப்படாது.

கோவிட்–19 மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து மக்கள் மீட்சிபெறுவதை உறுதி செய்யும் பணிகளை மேற்கொள்வதற்காக இம்முடிவு எடுக்கப்பட்டதாக பக்கத்தான் ஹராப்பான் தலைவர் மன்றம் கூறியது.

பெரு வெள்ளம் மற்றும் கோவிட்–19 பெருந்தொற்றினால் பொருளாதார ரீதியாக பொது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு, வருமான இழப்பு, வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு ஆகிய விஷயங்களைக் கருத்தில் கொண்டு தேர்தலை உடனடியாக நடத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது அது தெரிவித்து.

நமது ஒட்டுமொத்த முயற்சியும் மக்களைக் காப்பாற்றுவதையும் பொருளாதாரத்தை மீட்சிபெறச் செய்வதையும் இலக்காக கொண்டிருக்க வேண்டும் என்று அம்மன்றம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு ஒரு வருடம் முன்னதாக அதாவது அடுத்த மாதங்களில் தேர்தலை நடத்த சில தரப்பினர் வலியுறுத்தி வருவது தொடர்பில் பக்கத்தான் தலைவர் மன்றம் இவ்வாறு கருத்துரைத்து.

நாட்டில் திடீர் பொதுத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் அதனைப் பின்பற்றி தேர்தலை நடத்த சிலாங்கூர் திட்டமிடவில்லை என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

மலாக்கா மற்றும் ஜோகூர் தேர்தல்களில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து நாட்டின் பொதுத் தேர்தலும் ஒரிரு மாதங்களில் நடத்தப்படவேண்டும் என்று அம்னோ தலைவர்கள் சிலர் வலியுறுத்தி வருகின்றனர்.

# 2022 முதல் காலாண்டில் சிலாங்கூரில் 163,645 வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டன



ஷா ஆலம்:–
இந்த ஆண்டின் முதல் காலாண்டில் சிலாங்கூரில் பல்வேறு துறைகளில் மொத்தம் 163,645 வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. உற்பத்தி, விவசாயம் மற்றும் கட்டுமானத் துறைகளை உள்ளடக்கிய பணியிடங்கள் உள்ளதாகச் சமூக–பொருளாதார மேம்பாட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் வீ கணபதிராவ் தெரிவித்தார்.

“இந்த எண்ணிக்கையானது கடந்த பிப்ரவரி மாதம் வரை சமூகப் பாதுகாப்பு அமைப்பு (Socso) வழங்கிய தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது,” என்று அவர் நேற்று சிலாங்கூர் மாநிலச் சட்டமன்றத்தில் கூறினார்.

இதற்கிடையில், கணபதிராவ் கூறுகையில், மாநிலத்தில் வேலையின்மை விகிதம் முந்தைய காலாண்டில் 3.6 ஆக இருந்த நிலையில், கடந்த ஆண்டு இறுதியில் 2.9 சதவீதமாகக் குறைந்துள்ளது. அவரது கூற்றுப்படி, இதுவரை மொத்தம் 105,300 தனிநபர்கள் இன்னும் வேலையில்லாமல் உள்ளனர் என்று மலேசியப் புள்ளியியல் துறை வெளியிட்டுள்ள தொழிலாளர் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

“இது சிலாங்கூரில் வேலையின்மை குறைவதற்கான சாதகமான போக்கைக் காட்டுகிறது,” என்று அவர் கூறினார், இந்த ஆண்டின் முதல் காலாண்டிற்கான வேலையின்மை தரவு ஏப்ரல் மாதத்தில் பெறப்பட்டது

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிலாங்கூர் அரசின் உதவி – எதிர்கட்சி பாராட்டு

ஷா ஆலம்:–
கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக மாநில அரசு தொடக்கிய பந்துவான் சிலாங்கூர் பங்கிட் திட்டம் எதிர்க்கட்சியின் பாராட்டைப் பெற்றுள்ளது.

மொத்தம் 10 கோடியே 60 லட்சம் வெள்ளி ஒதுக்கீட்டிலான இத்திட்டம் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களின் சுமையைக் குறைப்பதில் பெரிதும் துணை புரிந்துள்ளதாகச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் டத்தோ ரிஸாம் இஸ்மாயில் கூறினார்.

நிதி வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்பட்ட போதிலும் இத்திட்டத்தை அமல்படுத்தியதற்காக மாநில அரசுக்கு நன்றி கூறித்தான் ஆக வேண்டும் என்று அவர் சொன்னார்.

மாநிலச் சட்டமன்றத்தில் நேற்று மேன்மை தங்கிய சிலாஙகூர் சுல்தானின் உரைக்கு



நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது உரையாற்றிய போது அவர் அவர் இவ்வாறு கூறினார். கடந்தாண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டன.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 1,000 வெள்ளியும் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு தலா 10,000 வெள்ளியும் பந்துவான் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. இந்த உதவித் திட்டத்தின் வழி 114,081 குடும்பங்கள் பயனடைந்தன.


**SELANGOR INDRU**
*Sidang pengarang*
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A. Pakyanathan
**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof
Hafiz Othaman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat, No.1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor**

*Tel : 03-55234856*
*Faks: 03-55235856*
*Email : info@mediaselangor.com*


Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lo2 2, Jalan Sepana 15/3, off persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.